# திராவிடநாடு



# மலாயா, ஜாவாவில் தமிழர் நாகரிகம்

## டாக்டர் நயினார் சொற்பொழிவு

மூன்றாண்டுக் காலமாக இந்தோனேஷியாவில் தங்கி அங்கு தமிழருடைய கலையும் மொழியும் பண்பும் எவ்வளவு தூரம் படிந்திருக்கின்றன வென்று ஆராய்ந்து வரும் பேராசிரியர் டாக்டர் முகம்மது ஹுசேன் நயினார் சிங்கப்பூரிலுள்ள தமிழர் சீர்திருத்தச் சங்கத்தில் 'தமிழ்ப் பண்பாடு' குறித்து சொற்பொழிவாற்றியதன் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:-

*தமிழர் நாகரிகத்தின் பழமையையும் அவர்களுடைய பண்பின் சிறப்பையும் நன்றாக உணர வேண்டுமானால் கடல் கடந்த நாடுகளிலேதான ஆராய்ச்சி நடத்த வேண்டும் என்று டாக்டர் நயினார் குறிப்பிட்டார்*

*'நாகரிகப் பழமை மிக்கவர்கள் யாரென்று கேட்டால் சாதாரணமாக ரோமானியர் என்று கூறுவர். அல்லது கிரேக்கர், சுமேரியர் என்று செப்புவர். ஆனால் இந்த நாகரிகர்கட்கெல்லாம் நாகரிகப் பொருள்களை அந்த நாளிலேயே வழங்குகிற அளவுக்கு அதிக முன்னேற்றமடைந்திருந்தவர்கள் தமிழர். இதற்குச் சான்றுகள் பல உண்டு' என்றார் டாக்டர் நயினார்.*

*'மலாயா, ஜாவா, சுமத்ராமுதலிய இடங்களில் தமிழர் நாகரிகம் மிகப் பரவியிருக்கிறது. ஆனால் சரித்திர ஆசிரியர்கள் இதுவரை இவ்வுண்மையை இருட்டடித்து வந்திருக்கின்றனர். இப்பகுதிகளில் தென்படுவது ஆரிய நாகரிகம் என்று விஷமத்தனமாகச் சிலரும், தெரியாத்தனமாகச்சிலரும் எழுதிவைத்திருக்கின்றனர். பலர் அதனை நம்பிக்கிடக்கின்றனர். இந்நிலையை மாற்றவேண்டும் என டாக்டர் நயினார் சொன்னார்.*

*இந்தோனேஷியாவில் தமிழருடைய அசல் பண்பைக் காண முடிகிறது என்று குறிப்பிட்ட பேராசிரியர் அதற்கான ஆதாரங்கள் சிலவற்றைக் காட்டினார்.*

*ஜாவாவைச் சீனர்கள் 'கலிங்கர் நாடு' என்றே பழைய நூல்களில் எழுதிவைத்திருப்பதை எடுத்துக் காட்டினார். ஜாவா மக்களிடையே தமிழர் பழக்கவழக்கங்களும் தமிழ் வார்த்தைகளும் நடமாடுவதையும் பேராசிரியர் விவரித்தார்.*

*டாக்டர் முகம்மது ஹுசேன் நயினார் மலாயாவில் இப்பொழுது தமிழரிடையே காணப்படும் புத்துணர்ச்சி கண்டு மிகமகிழ்வதாகக் குறிப்பிட்டார். தமிழர் சீர்திருத்தச் சங்கம் தமிழ் முன்னேற்றத்திற்கான பணிகளில் மேலும் மேலும் ஈடுபட்டு வெற்றிபெற அவர் வாழ்த்தினார்.*

*கூட்டத்திற்குத் தலைமைவகித்த சங்கத்தின் தலைவர் கோ. சாரங்கபாணி தமது முடிவுரையில் மலாயாவுக்கும் மலாய் மொழிக்கும் வளப்பம் ஊட்டியவர்கள் தமிழர்கள் என்று குறிப்பிட்டார். மலாயாவுக்கு உயிர்நாடி வர்த்தகம். அந்த வர்த்தகத்திற்கு துடிப்புப்போல அமைந்தது கப்பல். மலாயாவுக்கு கப்பலைக்கொண்டுவந்தது தமிழன். கப்பல் கட்டக் கற்றுக்கொடுத்தவன் தமிழன்; மலாய் மொழியில் 'கப்பல்' என்றே வழங்கப்படுவது இந்த உண்மைக்கு சிறந்த சான்று என திரு. சாரங்கபாணி குறிப்பிட்டார்.*

*'இந்தப் பிரதேச கலப்பட நாகரிகத்தில் முக்கால் பங்கு தமிழருடையது. இது பெருமை தரும் குறிப்பு. இப்பெருமை மட்டும் நமக்கு உரிமை தந்துவிடாது; அதற்கு நாம் தகுதி பெறவேண்டும்' என்றார் திரு. கோ. சாரங்கபாணி.*

*தமிழ் சீர்திருத்தச் சங்கத்தின் சொற்பொழிவுக் காரியதரிசி திரு. முருகு சுப்பிரமணியன் அவர்களும் தமிழர் நாகரிகம் குறித்துப் பேசியபின், டாக்டர் நயினாருக்கும் ஏனையோருக்கும் நன்றி கூறினார்.*

★

அடுத்த மாத முதல் பகுதியிற் கொழும்பில் ஆரம்பிக்கப்படவிருக்கும் அரசாங்கம் நடத்தும் சுய பாஷைப் புத்தகக் காட்சியில் தமிழ் நூல்களை காட்சிக்கு வைப்பதை அரசாங்கக் கட்சியிலுள்ள ஒரு பெரும் பகுதி கடுமையாக எதிர்ப்பதாகச் “சுதந்திரன்” செய்தி கூறுகிறது.

# நவம்பர்-1

மலர் 15 ]  ஆண்டுச்சந்தா ரூ. 7  [4—11—56]  தனிப் பிரதி 2 அணா  [ இதழ் 18

இந்தியத் துணைக்கண்டத்திலேயே பழம் பெரும் இடம் நமது பூமி. கலையும், நாகரிகமும், மொழியும், இலக்கியமும், சிற்பமும், இசையும் கொண்டிருந்த பூமி, நம்முடையதுதான். வளர்ந்தோங்கியிருக்கும் தமிழும், சாகாத அதன் இலக்கியங்களும், மதுரையும் தஞ்சையும் மாபலிபுரமும் காஞ்சியும் வழங்கும் சிற்பங்களும், கொண்டது நமது நாடு. கடல் கடந்தோம் பன்னெடுங் காலத்துக்கு முன்பே! தமிழரின் நாகரிகம் இங்குமட்டுமல்ல, வெளிநாடெங்கும் ஏற்றம் பெற்றிருந்த காலம் ஒன்றுண்டு!!—என்று தீட்டுகிறார் திருவாளர் டபிள்யு. ஆர். எஸ். சத்தியநாதன் சென்னை அரசாங்கத்தின் பிரதம காரியதரிசி, இந்து இதழில். இன்னொருவர், எழுதுகிறார், "ஆதி மனிதர்கள் வாழ்நத இடம் தமிழ் நாடு. 500,000 ஆண்டுகட்கு முன்னரே மனிதனின் காலடிபட்ட இடம் இது. பழந் தமிழன் உணவைச் சேகரிப்பவனாக மட்டுமல்ல, உற்பத்தி செய்யவும் அறிந்தான். பித்தளையையும், செம்பையும், இரும்பையும் கொண்டு எப்படிக் கருவிகளைக் செய்யலாம் என்பதையும் அறிந்திருந்தான். டி.வி. மகாலிங்கம் என்பார் இவர். சென்னை பல்கலைக் கழகத்தின் புதை பொருள் ஆராய்ச்சித் துறைப் பேராசிரியர். இவரது கருத்தும் இடம் பெற்றது, இந்து ஏட்டில்தான்.

நவம்பர் முதல் நாளன்று, மொழிவழி அடிப்படையில் நாடுகள் முகிழ்த்திருப்பதையொட்டி, எழுதவந்த கட்டுரையில் இக்குறிப்புகளைத் தருகின்றனர் இவர்கள். சத்யநாதன், பழந்தமிழ் நாட்டினைப் படம்பிடிக்கிறார்! மகாலிங்கம், பழந் தமிழ்க் குடிகளிலிருந்து இப்போது வாழ்வோர் வரை உள்ள சிறப்பியல்களை எடுத்தியம்புகிறார். இந்தளவுக்கு, இவர் தம் கவனம் திரும்பியமைக்குக் காரணம் நவம்பர் முதல் நாளாகும். இந்தியாவின் பூகோள அமைப்பில் எந்தவித மாறுதலையும் செய்யோம் செய்யோம் என்று கூறியோர், சட்டமூலம் மொழிவாரியாகப் பிரித்துத்தந்துவிட்ட தேதிஅது. அன்று முதல், பிரிட்டிஷ்காரன் வகுத்து வைத்துச் சென்ற அநீதி ஒழிந்தது. ஆந்திரம் பெரிதாகிறது ஐதராபாத்தையும் சேர்த்துக்கொண்டு! கன்னடம் முகிழ்த்துள்ளது! திருவாங்கூர் கொச்சி, கேரளமாக உருப்பெறுகிறது! கன்னடம், களிதெலுங்கு, கவின் மலையாளம் மூன்றும் மொழி வழியில் உருவாகிவிட்டன. அன்னை போன்ற தமிழகமும், தனி அமைப்பாகிவிட்டது. ஆனால், ஆளும் மகிபர்களால் தமிழ்நாடு எனும் பெயரினைப்பெறும் வாய்ப்புமட்டும் இல்லை, இன்னும்!!

இந்த மொழிவழி அரசுக்கோரிக்கை, ஐம்பது ஆண்டுகட்கு முன்பே அரும்பியதாகும். 1920ல் நாகபுரியில் கூடிய காங்கிரசே இதற்கு முதன் முறையாக முழக்கம் எழுப்பியது. இப்படி மொழிவாரியாக ஒவ்வொரு இடத்தையும் பிரித்து அமைத்தால், தன்னுடைய ஆங்கிலத்துக்கு செல்வாக்கு இராது, ஒவ்வொரு வரும் தத்தமது எல்லைக்குள் வலிவுபெற்றுவிடுவார்கள் என்கிற காரணத்தால் வெள்ளைக்காரன் பலமொழியினரையும் போட்டு அடைக்கும் மாகாணங்களை அமைத்து இருந்தான். ஒரு மொழி மாகாணமாக இருந்த வங்காளத்தை கர்சான் பிரபு கூறுபோட்டதும் இதற்காகத்தான்! வெள்ளையனின் இந்த விசித்திர மனோபாவத்தை அற்றை நாள் காங்கிரஸ் தலைவர்கள் கண்டதாலேயே மொழிவழி அரசுக்கு முரசு கொட்டினர். அந்த நினைவு நெஞ்சத்தை விட்டு நேரு போன்றவர்களுக்கு மறையாமலிருந்தது, ஆட்சிப்பீடம் ஏறி ஐந்தாறு மாதங்கள் வரையில்! அதனாலேயே ஏழு ஆண்டுகளுக்கு முன்பு நேரு-படேல்-பட்டாபி ஆகிய மூவரைக் கொண்டு ஒரு குழு நிறுவப்பட்டது, இது சம்பந்தமாக ஆலோசிக்க. பிறகு, நாட்கள் செல்லச் செல்ல, பிரிட்டிஷ் பாதையே தமது ஆதிக்கத்தை நிலைநாட்டும் வழியென டில்லி கண்டு கொண்டதால், இத்துறையில் தனது ஆர்வத்தைக் குறைத்துக்கொண்டது! மொழியின் பேரால் மட்டும் ராஜ்யங்களை அமைத்துக்கொண்டால் போதாதென்றும், பொருளாதாரம், வாழ்க்கை முதலிய பிரச்னைகளையும் அலசிப்பார்க்கவேண்டும் என்றும் பேசப்பட்டது. நேருவும் பிறரும், மொழிவழி அரசில் தாம் கொண்டிருந்த ஆர்வத்தைக் குறைத்துக்கொள்ளலாயினர். ஆனால், அவர்களுக்கு சவுக்கடி தந்தார் ஆந்திர கேசரி பிரகாசம்! ஆந்திர மக்கள் அனைவரும் தமக்கொரு தனி ராஜ்யம் வேண்டுமெனக் கோரினர்!! வீரர் பொட்டி சீராமுலு உயிர்விட்டுக் காட்டினார். இதன் விளைவாக நேருவே, வந்திருந்து இரண்டாண்டுகளுக்கு முன் அக்டோபர் திங்கள் முதல் நாள், ஆந்திர அரசைத் துவக்க நேர்ந்தது. அதைக் கண்ட பிறபகுதிகளும் ஆந்திரத்தைப் போலத் தாங்களும் மொழிவழி அரசை விரும்பின. கர்நாடகம், கேட்டது! கேரளம், குரல் எழுப்பிற்று! மராட்டியம் மார்தட்டிற்று! பஞ்சாப் கிளர்ச்சி என்றது! அதைக் கண்ட டில்லி, 'இதேதடா புதுக்குழப்பம!' என்று கருதி எஸ்.ஆர்.சி.கமிஷன் ஒன்றை நியமித்தது. நாடுகளை வெறும் மொழிவழியைக் கொண்டு மட்டும் பிரித்துவிட்டால் போதாது என்றுகூறி ஒருமொழி பேசுவோரையே பிரித்தாள சூழ்ச்சி செய்தது. அதன்படி தெலுங்கு பேசும் ஐதராபாத் தனி—இன்னொரு தெலுங்கு ராஜ்யம் தனி. பாதி மராட்டியர் பம்பாயில் இருப்பார்கள் இன்னொருபாதி மத்தியப் பிரதேசத்திலிருப்பார்கள் — இப்படி, திட்டம் வகுத்தது. அடிக்கடி நேரு வலியுறுத்த ஆரம்பித்தது போல. எஸ். ஆர். சி. கமிஷனும் இரண்டு மூன்று மொழிகளைப் பேசுவோரின் கதம்ப மாகாணம் அமையும் யோசனையையும் வெளியிட்டது. டில்லி மனமும் குளிர்ந்தது! ஆனால் நாடோ, இதனை ஏற்றுக்கொள்ளவில்லை! எரிமலையென எழுந்தது. மராட்டியர் அறப்போர்! பஞ்சாபியர் கிளர்ச்சி! வங்காளிகளின் தீரம்! பீகாரிகளின் போர் முரசம்!—என்று இப்படி கொந்தளிப்புகள் கிளம்பின.

எப்படியாவது இந்த உரிமைக்குரலுக்குச் செவிசாய்க்காமல் மட்டந்தட்டிவிட வேண்டும் என்று மனப்பால்

குடித்தது டில்லி. புதுப்புது யோசனைகள் கிளம்பின! கூட்டு மொழி அரசுகள், தட்சிண ராஜ்யம் என்பன போன்ற ஆசைகள் தெரிவிக்கப்பட்டன. பீகாரும் வங்கமும் சேர்ந்து ஒரே ராஜ்யமாக விளங்கப் போகிறது என்ருர் வங்க முதலமைச்சர். ஆசைகள் காற்றுக் கோட்டைகளாயினவே தவிர, எதனையும் ஏற்கவில்லை மக்கள்! நேருவும், பந்தும், ஆசாத்தும், தேபரும் "ஐயகோ! அடுக்குமா இது? நாம் எல்லாம் இந்தியரன்ரூ! இந்தியர்களுள் ஏனய்யா இதெல்லாம்-தமிழராவது, தெலுங்கராவது, மராத்தியாராவது, குஜராத்தியாவது" என்று கூறினர். மக்கள், போமய்யாபோம், என்று பதிலுரைத்தனரே அன்றி ஏற்றுக்கொள்ளவில்லை! எமக்கொரு எல்லை வேண்டும்—அப்போதுதான் எமது மொழியும் கலையும் வளர முடியும் என்றனர். மறுக்க முடியாத நிலையில், மாநிலங்களை மொழிவாரியாக அமைக்க நேர்ந்தது; மாற்று வழிகள் எதுவும் பயன்படவில்லை. இதிலும் எல்லோருக்கும் வழங்கப்பட்டிருக்கும் நீதி மராட்டியத்துக்கும் குஜராத்தியருக்கும் கிடைத்துள்ளதா எனின், இல்லை என்றே சொல்லவேண்டும்.

**நவம்பர் முதல்நாள் அமைந்த மொழி வழி மாநில அரசுகள், டில்லி ஏகாதிபத்யத்துக்கு கிடைத்த முதல் சம்மட்டி அடியாகும்.**

**மக்கள் விரும்பினுல் தனதுநாட்டின் எல்லைகளை நிச்சயம்பெறலாம் என்பதை எடுத்துக்காட்டிய நாளாகும்.**

**இந்தியே பெரிது அதுவே பொது மொழி என்று கூறப்பட்டு வருவதை இந்த துணைகண்டம் ஏற்காது, அந்தந்த மாநிலமும் தன்மொழியையும் கலையையும் வளர்க்கவே பாடுபடும் என்பதை உலகுக்குணர்த்தும் நாளாகும்.**

தென்னகம், வடவர் பிடியிலிருந்து விடுதலை பெற்றபின்னர் நாம் செய்ய வேண்டிய பாகப்பிரிவினைகள் இன்று நடந்துவிட்டன. ஆனுல், டில்லி, நமது மத்யஸ்தராக இருப்பதால் நமக்குள்ளேயே தகராறுகளுக்குரிய பல பிரச்னைகள் எல்லைகள் சம்பந்தமாக இருக்கின்றன! கேரளத்துடனும், ஆந்திரத்துடனும், நமக்குச் சேர வேண்டியவைகள் போயுள்ளன. இதனை துணிவுகொண்ட அரசாக இருந்தால் காமராஜர் அரசே சுமுகமாகத் தீர்க்கமுடியும். இதுதான், தமிழ்நாடு என்று பெயரிடாத, மாண்புள்ள அரசாக உள்ளதே!!

ஆந்திரம், கேரளம், கன்னடம், தமிழகம்—என்னும் நான்கு மொழி வழி அரசுகளும் அமைந்துவிட்டன. அடுத்தபடி அமையவேண்டியது, திராவிடக் கூட்டாட்சியேயாகும். இன்று இந்தியா பிரிக்கப்பட்டுள்ள நிலைமையைப் பார்க்கும்போது வடக்கத்திய மாநிலங்களாலேயே இந்தக் கூட்டாட்சி ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை! என்னதான் தேசீயம் பேசினுலும் வடக்கு, தெற்கு எனும் உணர்ச்சி இருக்கத்தான் இருக்கிறது.

நேருவுக்குப் பிறகு அந்நிலை வளர்வது நிச்சயம் என்று காங்கிரஸ் வட்டாரமே கருதுகிறது. அப்படியொரு கூட்டு ஆட்சிமுறை வேண்டுமென்று தமிழகமும் ஆந்திரமும் கன்னடமும் கேரளமும் எதிர்காலத்தில் முன்வரப்போவது நிச்சயம். அந்நன்னுளை நோக்கி நடைபோடும் வகையில் பிரிந்து செல்லும் நமது சகோதரர்களுக்கு வாழ்த்துக் கூறுவோம்! வாழ்க ஆந்திர கேரள கன்னட அமைப்புகள். தமிழகம் தழைத்திடுக!

★

# தன்மானம் பிறக்குமா?

*அண்மையில் தருமமிகுசென்னை மாநிலத்திலே ஓர் அதிர்ச்சிகரமான சம்பவம் நடந்தேறியதை அறிந்த தன்மானமுள்ள தமிழ் மக்களனைவரும் (தமிழ் அமைச்சர்களுட்பட) கண்ணீர் விடுத்திருப்பரென்பதில் தடை ஏதுமில்லை. இச்சம்பவத்தின் மூலமேனும் அறிவு வரவேண்டும். அத்தகைய அறிவின் மூலமே தன்மானமும் உதயமாக வேண்டும். அந்த நாள் என்ருளோ? அந்தநாள் தான் (தாழ்ந்து தாழ்வுற்று வறுமை மிஞ்சி நெறி தவறி கெட்டு, பாழ்பட்டு, கட்சிப் பூசல்கள் மலிந்து படுகொலைப் படலங்கள் பெருகி, கட்சிக்குள் குத்து வெட்டு, ஆகியவைகள் அமோகமாகப் பரவிக் கிடக்கும்) இன்றைய தமிழகத்தின் தனிப் பெரும் தமிழர் திருநாளாகும்.*

*விருது நகர் காங்கிரஸ் தலைவர் திரு கே. சங்கரலிங்க நாடார் நாட்டின் நிலை குறித்து 77-நாட்களாக, கவனிப்பாரற்று, புறக்கணிக்கப்பட்டு, உண்ணவிரதமிருந்து உயிர் நீத்த உத்தமன்.*

*1956-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ந்தேதி அப்பெரியார் ஆவி நீத்தாரென்ற செய்தி அசோசியேடட் பிரஸ் அகிலத்திற்கு அறிவித்த[illegible]. அச்செய்தி உலகின்கண் உள்ள எல்லாப் பத்திரிகைகளிலும் இடம்பெற்றன. அதன்மூலம் சங்கரலிங்க நாடார் அழியாப் புகழ் பெற்றுவிட்டார். இன்பமயமான இறைவனின் திருவடிநிழலிலே தமிழகத்தின் அவல நிலை குறித்து கண்ணீர்விடுவதை நாம் காண்கிருேம். ஒரு நாள் உணவில்லையெனில் என்ன அவதிக்காளாகிருேம்? பசிப்பிணி வாட்டும் போது அதை அனுபவித்தவர்களுக்குத்தான் நன்கு தெரியும்.*

*ஆனுல் நமது நாடாரவர்கள் 77 நாட்கள் எவ்வாறு உறுதியுடன் காலம் கழித்தாரென்று ஐயுறும் வேளையிலே அவர்தம் ஆவி மண்ணுலகைவிட்டுப் பிரிந்தது தமிழகம் செய்தகொடுமையன்ருே?*

*தலைவர் ம. பொ. சி. கெஞ்சினுர்.*

*அறிஞர் அண்ணு வேண்டினுர்.*

*அனைத்தையும் மரியாதையுடனும், உறுதியான உள்ளத்துடனும், கண்ணீர்த்துளிகளால் பேசவியலா நிலைமையிலே நிராகரித்தாரெனில் அவர்தம் அசைக்கமுடியா உறுதியைப் போற்றத்தான்வேண்டும். போற்றிப் பலன் என்ன? அத்தகைய புகழுக்குடைய வீரமகன் நம்மிடையே இல்லையே என்று எண்ணுந்தோறும் நமது கண்களில் நீர் மல்குகிறது, கண்ணீர் அல்ல! இரத்தக் கண்ணீர்.*


*இந்த நிலைகெட்ட தன்மானமற்ற சமுதாயத்திலே தமிழ்நாட்டுக்கு 'தமிழ்நாடு' என பெயரிட வெட்கப்படும் தமிழ் அமைச்சர்களின் தன்மானமற்ற அதிகார ஆட்சியின்கீழ் அடங்கி ஒடுங்கி, அறிவையிழந்து பயந்து நடுநடுங்கி வாழ்வதைகாட்டிலும், காந்தீயத்தின பாதையிலே—உத்தமர் தந்த ஆயுதத்தைத் துணைகொண்டு உயிர் துறக்க முனைந்தார் செயல் வீரர் சங்கரலிங்க நாடார்.*

*சங்கரலிங்கத்தின் மரணம் தமிழகத்திற்கு இரு கேள்விகளைத் தந்துள்ளது.*

*அறிவு வருமா?*
*தன்மானம் பிறக்குமா?*

*காலம் பதில் தரும். அன்றுதான் அன்னுரின் ஆன்மா சாந்தியடையும். அன்றுதான் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைஞ்ச வேண்டும்.*

—"**தந்தி**" ரங்கோன்.



## காஞ்சீபுரம்

4—11—'56

# தம்பி!

தமிழகம் திருநாள் கொண்டாடுகிறது—தாயகம் விழாக்கோலம் பூண்டிருக்கிறது — திருநாட்டைப் பெற்றோம், இனி இதன் ஏற்றம் வளரத்தக்க வகையிலே பணிபுரிதலே நமது தலையாய கடன் என்று, தமிழ்ப் பெருங்குடி மக்களெல்லாம் உறுதிகொண்டிடும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது— கொடியும், படையும், முரசும் அரசின் முறையும் வேறு வேறு எனினும், எல்லா முற்போக்குக் கட்சிகளும், தாயகத்தின் திருவும் திறனும் செழித்திடப் பணியாற்ற வேண்டும் என்பதிலே, முனைந்து நிற்கின்றன—புதிய தமிழகம் கண்டோம், இது புதியதோர் உலகிலே உரிய இடம் பெற்றுத் திகழ்ந்திடவேண்டும்—நாம் அனைவரும் அதற்கான வழியிலே தொண்டாற்றும் திறன் பெறல் வேண்டும் என்ற ஆர்வம் மலர்ந்திருக்கிறது.

நவம்பர் திங்கள் முதல் நாள், புதிய தமிழகம் உருவாகிறது. ஓர் அரை நூற்றாண்டுக் காலமாக, அரசியல் தெளிவும் நாட்டுப் பற்றும் கொண்டோரனைவரும், நடத்தி வந்த இலட்சியப் பயணம், தடைபல கடந்து படை பல வென்று, ஆயாச அடவிகளையும், சஞ்சலச் சரிவுகளையும் கடந்து, வெற்றிக் கதிரொளி காணும் இடம் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது.

இன்று நம்முன் தோன்றி, நம்மை எலாம் மகிழ்விக்கும் இத்தாயகம், புதியதோர் அமைப்பு அன்று—ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே இந்த மானில முழுதும், மதிப்புப் பெற்றிருந்த மணித்திருநாடாகும். இடைக் காலத்திலே, இடரும் இடியும் தாக்கின, இழிநிலைக்கு இழுத்துச் சென்று அழுத்திவைக்கப்பட்டிருந்தது; இன்று, கட்டுண்ட நிலைபோயிற்று, தளைகள் நொருங்கின, தமிழகம் புதிய கோலம் காட்டி நம்மை மகிழ்விக்கிறது.

மக்களாட்சியின் மாண்பும் பயனும் மிகுதியும் மொழிவழி அரசு மூலமே கிட்டும் என்று அரை நூற்றாண்டாகப் பேசி வந்தனர் பேரறிவாளர், போரிட்டனர் ஆற்றல் மிக்கோர், அந்த உயரிய குறிக்கோளை அழித்துவிட முனைந்தனர் ஆணவக்காரர், எனினும் எல்லா இடையூறுகளையும் காலச் சமமட்டி நொறுக்கித் தூளாக்கிற்று. கருத்துக்கு விருந்தாய் அமைகிறது தமிழகம்.

புதிய தமிழகம்—ஏதேதோ புதுமைகள் நிகழ்ந்திடும் என்று எதிர்பார்த்து வரவேற்கப்பட வேண்டிய ஒன்றன்று — அது ஆட்சி அலுவலைச் செம்மையுடையதாகச் செய்விக்கும் ஒரு வசதி தரும் ஏற்பாடு — வேறில்லை — என்று எண்ணுவோர், புதிய தமிழகம் கண்டு, மக்கள் விழாக்கொண்டாடுவதன் கருத்து

# வாழ்க தமிழகம்!
# வருக, திராவிடம்!

யாது? அவர்தம் அகமும் முகமும் மலர்ந்திடும் காரணம் என்ன? என்பதறியாது கிடக்கின்றனர். அட்லிக்கும் ஸ்டிவன்சனுக்கும், அபிசீனிய மன்னருக்கும், அயிசனவருக்கும், இது, வெறும் ஏற்பாடுதான்—அரசியல் அலுவலுக்காகச் செய்து கொள்ளப்படும் நிர்வாக அமைப்புத்தான்! அவர்களால், அதற்கு மேல் இது குறித்து உணர்ந்திட முடியாது—அவர்கள் தமிழர் அல்லர் என்ற காரணத்தால். தமிழர்க்கோ, தமிழ்நாடு புதிய அமைப்பாகக் கிடைப்பது, மன எழுச்சி அளித்திடுவதாகும். முத்தம் வெறும் 'இச்சொலி' தானே, இதிலென்ன சுவை காண்கிறாய் என்று, தான் பெற்றெடுத்த பாலகனை உச்சிமோந்து முத்தமிடும் தாயிடம் கேட்பார் உண்டா! தமிழர், தமிழகம் கண்டோம் என்று களிநடமாடி, விழாக் கொண்டாடும்போது, இதிலே என்ன பெரிய சுவை கண்டுவிட்டீர்கள், முன்பு இருந்த ராஜ்ய அமைப்பு நிர்வாக காரியத்துக்குக் குந்தகம் விளைவிப்பதாக இருந்தது, அதன் பொருட்டு, இப்போது 'ராஜ்ய சீரமைப்பு' செய்துள்ளோம், இதனாலேயே தமிழர், ஆந்திரர், கேரளத்தார், கருநாடகத்தார் என்றெல்லாம் கருத்திலே உணர்ச்சிகளை வளரவிட்டுக் கொள்ளாதீர்கள், அனைவரும் இந்தியர், அது நினைவிலிருக்கட்டும், யாவரும் பாரத நாட்டினர், அதனை மறந்துவிடாதீர்கள் என்று நேரு பண்டிதர் கூடப் பேசுகிறார்—அவருடைய மனது குளிர நடந்து கொள்வதுதான் இன்றைய அரசியல் சூழ்நிலையில் பலன் அளிக்கும் என்று எண்ணும் பலரும் அது போன்றே பேசிடக் கேட்கிறோம்.

தமிழருக்குத் தமிழகம் அமைகிறது என்பதனால் ஏற்படும் எழுச்சி, எங்கே, ஊட்டிவிடப்பட்டிருக்கும் பாரதம் — இந்தியர் — என்பன போன்ற போலித் தேசீயத்தைத் தேய்த்து, மாய்த்து விடுமோ, புதிய தமிழகம் என்று பூரிப்புடன் பேசத் தொடங்கி, தாயகம் என்று பெருமையுடன் பேசத் தொடங்கி விடுவார்களோ என்ற அச்சம், எல்லா தேசீய இனங்களையும் ஒரே பட்டியில் அடைத்து, எதேச்சாதிகாரத்தால் ஆட்டிப்படைக்க வேண்டும் என்று திட்டமிட்டிருப்போருக்கு இருக்கத்தான் செய்கிறது. எனவேதான் அவர்கள், அட்லி போலவும் அபிசீனிய மன்னர் போலவும், இதெல்லாம் நிர்வாக ஏற்பாடு என்று கூறுகின்றனர். மாலை விலை ஆறணா என்பது மட்டுந்தான், மலர் விற்போனால் அறிய முடிந்தது—அதனை மங்கை நல்லாளுக்காகப் பெறுகிற மணவாளன் அல்லவா அறிவான், மாலையைக் கண்டதும் கோலமயில் சாயலாள், குமுதவிழிப் பாவையாள், பாகு மொழியாள், அடையும் மகிழ்ச்சி எத்துணை சுவையுள்ளது என்பதனை. தமிழகம் புதிய அமைப்பாகிறது என்பதிலே காணக் கிடைக்கும் எழுச்சியைத் தமிழர் மட்டுமே முழுதும் பெறமுடியும் — மற்றையோர் முயற்சித்தும் பலன் இல்லை. ஓரளவுக்கு இந்த இயற்கையை அறிய முடிந்ததனாலேயே, நேரு பண்டிதர், காந்தியார் காலத்திலே வாக்களிக்கப்பட்ட திட்டமாகிய மொழிவழி அரசு பற்றி, முகத்தைச் சுளித்தபடி பேசவும், அது என்ன பித்தம் என்று கேலி செய்யவும், அது வெறி அளவுக்குச் சென்றுவிடாமற் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கை ஏவவும் முற்பட்டார். உலக அரங்கிலே காணக்கிடக்கும் பிரச்சினைகளை அறிந்தவர், உயர்நிலையில் அமர்ந்திருக்கும் நேரு பண்டிதர். தேசீய இன எழுச்சி வரலாறுகளைத் தெரிந்தவர். அழுத்திவைக்கப்பட்ட தேசீய எழுச்சி, என்றேனும் ஓர் நாள் வெடித்துக் கிளம்பிடும் என்ற பேருண்மையை அறிந்தவர். பல தேசீய இனங்களை தலைதூக்கவிடாதபடி அடக்கி ஒடுக்கி ஆட்சி நடாத்தியோர் இறுதியில், என்ன கதியாயினர் என்பதைப் படித்திருக்கிறார். தேசீய இன எழுச்சியை அலட்சியப் படுத்தும், அறிய மறுக்கும், அப்பாவிகள், பட்டியலில் அவர் பெயரை அறிவிலியும் சேர்த்திடத் துணியமாட்டான். அவர் காண்கிறார், மேலை நாடுகளிலே, காலம் கிடைத்ததும், புயலெனக் கிளம்பிடும் தேசீய இன எழுச்சிகளை. எனவே, நேரு பண்டிதர், 'மொழி வழி அரசு' எனும் திட்டம், மெள்ள மெள்ளக்கூட அல்ல, வேக வேகமாக, தனி அரசு எனும் கட்டத்துக்கு வழிகோலும் என்பதை உணர்ந்திருக்கிறார். எனவேதான், முடிந்த வரையில், மொழிவழி அரசு எனும் திட்டத்தை அமுலாக்குவதில், தாமதம், தயக்கம் காட்டினார், காலத்தை ஓட்டினார், பிறகு கட்டுக்கு அடங்காத நிலை கிளம்பும் என்பதற்கான குறி தோன்றியதும், மொழிவழி அரசு எனும் திட்டத்தை மூளியாக்கியே தந்திருக்கிறார், மூளியாக்கப்பட்ட நிலையிலும், மொழிவழி அரசு என்பது, புதியதோர் நம்பிக்கையை, ஊட்டும் என்பதையும் அறிந்து, பாரதத்தை மறவாதீர்! இந்தியர் என்பதை நினைவிலே கொள்ளுங்கள்! இதெல்லாம் வெறும் நிர்வாக ஏற்பாடு! என்று பன்னிப் பன்னிக் கூறுகிறார் — அவருக்குப் பக்கம் நின்று அதே பல்லவியைப் பாடப் பல கட்சிகள் உள்ளன.

வாழிய செந்தமிழ்
வாழ்க நற்றமிழர்
வாழிய பாரதமணித் திருநாடு!

என்று அவர்கள் கீதம் இசைப்பது அனைவரும் வாழ வேண்டும் என்ற நல்லறத்தைக் கூறுவதற்காக மட்டுமல்ல—தமிழர்காள்! தமிழகம் பெறுகிறீர்கள்! புதிய அமைப்பு! விழாக் கொண்டாடுகிறீர்கள்! உற்சாகம் பெறுகிறீர்கள்! அதுவரையில் சரி—ஆனால் இந்த உற்சாகத்தை உறுதுணையாக்கிக் கொண்டு தனி அரசு என்று பேச ஆரம்பித்துவிடாதீர்கள்—பாரத மணித்திருநாட்டை வாழ்த்துங்கள்!—என்று கூறி, கட்டிவிடப்பட்டிருக்கும் அந்தப் போலித் தேசியத்தைக் காப்பாற்றும் நோக்கத்துடனும் தான், பாடுகின்றனர். பரரத மணித் திருநாடு என்று பாடுவதும், சொந்தம் கொண்டாடுவதும், பரந்த மனப்பான்மை, பண்புக்கு அறிகுறி, தமிழ்நாடு என்று மட்டும் கூறிக் கிடப்பது குறுகிய மனப்பான்மை கிணற்றுத் தவளைப்போக்கு,

(15-ம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தீவு

இலங்கைக்குப் பல பெயர்கள் இருப்பதுபோல், உலகில் வேறு எந்தத் தீவுக்கும் இருக்குமென்று கூறமுடியாது.

இயக்க வேந்தனாகிய குபேரன் இலங்கையில் ஆட்சிபுரிந்தான் என்று புராணம் கூறுவதால் இந்தத் தீவு இயக்கத் தீவு என்று பெயர் பெற்றது. இனி நாகர்கள் முன்னொரு காலத்தில் இலங்கையில் வாழ்ந்ததால் இதற்கு நாகத் தீவு என்றும் பெயர் வந்தது.

முன் காலத்தில் இலங்கை தமிழ்நாட்டின் பகுதியாய் இருந்ததென்றே சரித்திர ஆராய்ச்சியாளர் துணிகிறார்கள். இந்த நாட்டின் பழம் பெருங்குடிகள் திராவிட வகுப்பினர் என்பது அவர்கள் கருத்து. கந்தபுராண காலத்தில் சூரபத்மன் ஆட்சிபுரிந்தபோது, கார்த்திகேயப் பெருமாள் இந்த நாட்டுக்கு வந்த வரலாற்றைக் கதிர்காமம் என்னும் திருத்தலம் இன்றும் நினைவூட்டிக்கொண்டிருக்கிறது என்கிறார் ஸர் பொன். அருணாசலம். களுகங்கை கடலோடு கலக்கும் இடத்தின் ஒரு கரை தேவபுரமென்றும் மற்றொரு கரை தேவசத்துரு கரை (தேசஸ்தர துறை) என்றும் வழங்குவது இந்தப் போரை நினைவூட்டுகிறதென்று இவர் குறிப்பிடுகிறார்.

ஒரு பெருங் கண்டத்தின் பெரும் பகுதியாயிருந்த இலங்கை பல முறை கடலில் முழுகியது என்று சரித்திர நூல்கள் தெளிவாகக் கூறுகின்றன. அப்படியானால் இலங்கையின் நிலப்பரப்பு இப்போதுள்ளதைவிட முன்காலத்தில் இன்னும் பல மடங்கு விரிந்திருக்கவேண்டும். ஆழி சூழ் இலங்கை ஆயிரக் கணக்கான மைல்களுக்குப் பரந்திருந்ததென்கிறார்கள். இராவணனுடைய ஆட்சியின் பின்பு ஒருமுறை கடல் கொண்டதாம். இராம இராவண யுத்தம் கி. மு. 2387-ல் நிகழ்ந்ததென்று சிங்களச் சரித்திரம் குறிப்பிடுகிறது, ஸர். வில்லியம் ஜோன்ஸ் இந்த நிகழ்ச்சி கி. மு. 1810-ல் நிகழ்ந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார். பத்துவாசன் காலத்திலும் (கி. மு. 500) களனி திஸ்ஸன் காலத்திலும்(கி. மு. 200) இந்தத் தீவுக்குக் கீழ், மேல் தென் பாகங்கள் கடலில் ஆழ்ந்தன என்று சிங்களச் சரித்திரம் கூறுகிறது. இன்னும் கடையம் பொத்த லங்கா விஸ்தாரய என்னும் நூல்களால் களனி என்னும் ராஜதானி கடலிலிருந்து 28-மைல் தூரத்தில் இருந்ததென்று தெரிகிறது ஒரு லட்சம் பட்டினங்களையும் 970-நெய்தற் பாக்கங்களையும், 470 முத்துக் குளிப்பவர் கிராமங்களையும் சேர்த்து, இலங்கை நாட்டின் 12-ல் 11-பாகத்தைக் கடல் மூடியதென்று ராஜாவலி என்ற சிங்கள நூல் குறிப்பிடுகிறது.

**இலங்கைத் தீவு குறித்து வழக்காற்றில் உள்ள சில சுவைதரும் கருத்துகள் இங்கு தரப்பட்டுள்ளன.**

**இதில் காணக்கிடக்கும் புராணக் கருத்துகள் 'திராவிடநாடு' ஒப்புக்கொள்ளுவன அல்ல.**

**இலங்கை சிங்களருக்கேசொந்தம்என்று பாத்யதைகொண்டாடப்பட்டு வரும் இந்தச் சமயத்தில் பல்வேறு கோணங்களிலிருந்து காண்போர் தரும் கருத்துரைகள் பயனளிக்கவல்லன என்ற எண்ணத்தில், தந்திருக்கிறோம்.**

இலங்கையின் கீழ், மேல், தென் பகுதிகளே கடல் வாய்ப்பட்டன என்பது மிகப் பொருத்தம்.

இலங்கையின் தென் கீழ்க் கடலில் கலங்கரை விளக்கம் கட்டியிருக்கும் கல்பாறையை இன்னும் இராவணக்கோட்டை என்றேகூறுகிறார்கள். இராவணன் திருக்கோணேசர் கோயிலைக் கட்டினான் என்பது கர்ணபரம்பரை. இராமர் ராவணனுடன்போர் தொடுப்பதற்கு முன்பு முனீசுவரத்தில் வணங்கினானென்று சர். அருணாசலம் குறிப்பிட்டிருக்கிறார். சேது பந்தனத்துக்கு 'ராமர் அணை' என்ற பெயர் இருப்பதையும் இங்கே கவனிக்கவேண்டும். சீதாதேவியின் பெயர் நுவரெலியாவுக்கும் ஹக்கலைக்கும் இடையிலுள்ள சீத்தலவா (சீதை வெளி) சீதால (சீதை அருவி) சீதாகுண்ட (சீதை குண்டம்) என்ற இடப் பெயர்களாலும், பொய்ச் சீதை உருவத்தை இந்திரஜித்து எரித்த இடமென்று கருதப்பெறும் சீதாவக்கையென்ற இடப்பெயராலும், இலங்கையில் இன்றும் நின்று நிலவுகிறது. இன்றும் ராமாயணக் கதைகள் பலவிதமாக மலை நாட்டில் வழங்குகின்றன. இவற்றில் சிலவற்றை மேஜர் போர்ப்ஸ் என்ற சரித்திர அறிஞர் தொகுத்துக் கூறியிருக்கிறார்.

*

இலங்கையெனும் பெயர் எந்தக் காரணம் பற்றி உண்டாயிற்று

என்று துணிந்து கூற முடியவில்லை. இந்தச் சொல் லட்சம் அல்லது இலக்கம் என்ற சொல்லின் மருவென்றுகொண்டு, இதற்கருகில் இருந்த லட்சம் தீவுகள் கடல் வாய்ப்பட்டன என்ற கர்ண பரம்பரை வழக்கு ஒன்றை இது நினைவூட்டுகிறதென்றார் மேஜர் போர்ப்ஸ். இலக்கம் என்ற சொல் ஒளியென்றும் பொருள்படுவது "எல்லேயிலக்கம்" (தொ. உரி) என்ற நூற்பாவால் தெரிகிறது. ஒளியென்று ஒரு பொருள்படும் எல், இலக்கம் என்னும் இரண்டு சொற்களிலிருந்தும் முறையே ஈழம் என்பதும், இலங்கை, லங்கா என்பவையும் பிறந்திருக்கலாம்.

இலங்கை கடல் கால்வாயால் இரண்டு பெருங் கூறுகப் பிரிந்திருக்கிறது. முந்தியது வடபக்கம் உள்ளது. பிந்தியது தென்பக்கம் உள்ளது. இரத்தினத் தீபம் என்ற ஒரு பெயர் இலங்கைக்கு உண்டு, சமந்த கூடத்துக்கு அருகில் இரத்தினபுரி என்ற சிறந்த நகரம் இருப்பதையும் இங்கே நினைவு கூரலாம் இலங்கை ரத்தினக் கல்லுக்குப் பெயர்போன இடம்.

*

ஈழம் என்ற பெயர் இலங்கை முழுவதற்கும் பொதுவாகவும், வடபால் கூறுகிய யாழ்பாணத்துக்குச் சிறப்பாகவும் வழங்குகிறது. பழஞ் சிங்களம் 'எலு' என்று வழங்கி வந்ததென்று சிங்களவரும் ஒப்புக்கொள்கிருர்கள். 'எலு' என்பது தமிழ்ச்சொல் என்று சொற்பிறப்பு ஆராய்ச்சி நிபுணர் சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிடுகிருர். இனி, சிறி ஈழம், சிஹளம், சிங்களம் என ஆயிற்றென்று கொள்வாரும் உண்டு.

தமிழர் வாழ்ந்த நாடு தமிழகம் என்ருனதுபோல ஈழர் வாழ்ந்த நாடு ஈழம் என்று ஆகியிருக்க வேண்டும். சேரர், சோழர், பாண்டியர் என்ற தமிழரின் ஒவ்வோர் இனம்போல், ஈழரும் மற்ருேர் இனமாக இருக்கலாம். இந்த ஈழர்களே இலங்கையில் நாகர்களுக்கும், சிங்களவர்களுக்கும் முன்பு இருந்த பழங்குடி மக்கள். ஈழர் என்ற சொல்லையே ஆரியர்கள் 'யக்ஷர்' என வழங்கிஞர்கள். ஆரியர்களுக்கு ழகர எழுத்தொலி இல்லாததால் அதை ஷகாரமாக்கி, 'யக்ஷகர்' என்று திரித்து வழங்கி இருக்கக்கூடும். ஈழர் தலைவன் தான் மிகப் புகழ்பெற்ற இராவணன், குவேனியும் இந்த ஈழர் தலைவியே. ஈழர்கள் கல்வி, கைத்தொழில், வேளாண்மை முதலியவற்றில் சிறந்து வாழ்ந்தவர்களென்று பழைய நூல்களால் தெளிவாகிறது. ஈழக்குலச் சான்ருேர் வரலாற்ருல் ஈழரின் போர்ப் பயிற்சியும் ஈழத்துப் பூதன்றேவஞர் வரலாற்ருல் ஈழரின் புலமையும் விளங்குகின்றன.

இனி ஈழம் என்பது பொன், கள், கிழக்கு என்று பல பொருள் தந்து நிற்பதால் இந்தப் பொருள்களைக் கருத்தில் வைத்துப் புராணிகர் பல கதைகளை உண்டாக்கிவிட்டார்கள். பொன் மலை எனப்படும் மேருவின் ஒரு சிகரமே ஈழ நாடாயிற்றென்பதுபௌராணிகர்கூற்று. ஈழுவர் என்ற குடியினர் இந்தியாவில் காணப்படுவதால் அவர்கள் இந்தத் தீவிலிருந்து சென்று இந்தியாவில் குடியேறியவர்களாக இருக்கலாம். ஈழ நாட்டிலும் மலையாளத்திலும் குடியேறியவர் ஈழவர் எனவும், திருநெல்வேலியில் குடியேறிய ஈழத்துப் பிள்ளைமார், இல்லத்துப் பிள்ளைமார் எனவும் வழங்குவதை இங்கே நினைவு கூர வேண்டும்.

*

இலங்கையின் வடபகுதியை வெற்றிகொண்ட ராஜராஜன் தன் நாட்டின் ஒரு பகுதியாக இதைக் கருதி இதற்கு மும்முடிச் சோழ மண்டலம் என்று பெயரிட்டு அழைத்தான் என்பது தென்னிந்தியச் சாசனங்களால் புலனுகிறது.

> "இந் நாள் வரையிலே மிக எளியவையாகத் தோற்றக் கூடிய முஹம்மதின் அந்தச் சில கொள்கைகள் மாபெரும், மகத்தான சாதனை யாற்றியிருக்கின்றன."
>
> —சர். வில்லியம் மூய்ர்.

சிங்களம் அல்லது சிங்களத் துவீபம் என்பதற்குச் சிங்களர் வாழும் இடம் என்று பொருள். சிங்களம்என்னும்தீவில்வாழ்ந்தவர்கள் சிங்களர் என்றுபெயர்பெற்ருர்கள் என்று வைபவ மாலைக்காரர் கூறுகிருர் சிங்களர் என்னும் மரபினர் வாழ் இடம் சிங்களமாயிற்று என்பவரும் உண்டு. இடப் பெயர் ஆராய்ச்சி நிபுணர் திரு. எஸ். டயிள்யூ. குமாரசாமி, சிங்களம் என்ற சொல் சமஸ்கிருத மகாபாரதத்தில் வந்திருக்கிறதென்று குறிப்பிட்டிருக்கிருர். மேலும், இவர் சிங்களர் என்ற சொல் கேரளர், போசளர், குந்தளர் என்பவை போல் ஆரியச் சொற்சிதைவாகிய இனப்பெயராயிருக்க வேண்டும் என்கிருர்.

சிங்களர் விஷ்ணுவையும், கதிர்காமக் கடவுளையும் பத்தினித் தெய்வோ என்ற கண்ணகியையும் இன்னும் வழிபட்டு வருகிருர்கள். கண்டியில் ஆண்டுதோறும் நடக்கும் பெருவிழாவில் இந்தத் தெய்வங்களே முதன்மைபெற்றிருந்தது சரித்திர வாயிலாகத் தெரியும் உண்மை.

இனி, தமிழொழிந்த பதினேழ் நிலங்களுள் முதலில் கூறப்பட்டிருப்பது சிங்களம். இதை நன்னூல் உரையாசிரியராகிய மயிலைநாதர் எடுத்துக் காட்டியிருக்கிருர்.

பழங்காலத்து, யவன (உரோம, கிரேக்க) ஆசிரியர்கள் இந்தத் தீவு 'தாபிரபன' என்ற பெயர் உடையது என்று அறிந்திருந்தார்கள். இது மிகவும் பழையதொரு பெயர். இராவணன் தீவு என்று இதற்குப் பொருள்படும் என்கிருர்கள் ஒரு சாரார். இது தம்பபன்னி என்று சிங்கள நூல்கள் இந்தத் தீவுக்கு இட்ட பெயரின் மருவென்கிருர்கள் இன்னொருசாரார். தம்பபன்ன என்பதற்குச் செந்நிறமுடையது என்று பொருள். விஜயனும் அவன் பரிவாரமும் முதல் முதல் இந்தத் தீவில் இறங்கிய போது, களைப்பினுலும் அலுப்பினுலும் நடக்கச் சக்தியற்றுத் தங்கள் கைகளை ஊன்றிக்கொண்டிருந்தார்களென்றும், தங்கள் கைகள் செந்நிறம் படிந்தது கண்டு 'தம்பயன' என்று பெயரிட்டார்களென்றும் மகாவம்சம் கூறுகிறது. இந்த

மாதிரி பல வெற்றுரைகள் சிங்கள மகாவம்சத்தில் இருக்கின்றன. தென்னிந்தியாவில் தாமிரபரணி ஆற்றுக்கு அருகில் இருந்த தமிழர் இங்கே வந்துகுடியேறியபோது இந்தத் தீவுக்கு இந்தப் பெயரிட்டார்கள் என்பதே பொருத்தம். தென்னிந்தியாவில் தமிழரைக் கண்ட பிறதேசத்தவர்கள் இங்கேயும் மகாவலி கங்கையையும் தமிழரையும் கண்டபோது இந்தத் தீவுக்கு அந்தப் பெயரையிட்டு அழைத்தார்கள் என்றும் கொள்ளலாம். இதுவே ஸர். பொ. அருணசலத்தின் கொள்கை. இப்போது பொதியமலையிலே பிறந்து கிழக்கே ஓடிக் கொற்கையிலே கடலோடு கலக்கிற தாம்பரபரணி ஆறு முன்னொரு காலத்தில் — அதாவது இப்போதுள்ள கடல் கன்னியா குமரிமுனைக்கு வடபால் இல்லாத போது — கொற்கைக்கும் கிழக்கே ஓடி வந்து, இலங்கை வரையிலும் சென்று இலங்கைக்குள்ளும் புகுந்ததால், அந்த ஆற்றின் பெயரையே இலங்கைக்கு பெயராக வழங்கினார்களென்றுநினைக்கலாம். ஆனால் இதற்குச் சான்றுகள் இனித்தான் கிடைக்கவேண்டும்.

*

பிற்காலத்துக் கிரேக்கரும் உரோமரும் இந்தத் தீவைப் பாலாசி முண்டு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைத் தமிழ்ச் சொல் என்று கொள்கிறார் முதலியார் இராச நாயகம். பழைய சீழ மண்டலம் என்பது சீலமண்டலம் என்றும், ஈழமண்டலம் என்றும் திரிந்து இந்தப் பெயர்கள் வந்தனவாம். இதேபோல் பாலாசி முண்டு என்பது பரசிறீ மண்டலம் என்பதன் மரூஉ என்கிறார் ஆசிரியர் வின்செண்ட். இது ஒரு பட்டினத்தின் பெயரென்றும், இலங்கையின் வடமேற்குப் பகுதியில் இருந்ததென்றும் கூறுகிறார் ஆசிரியர் பிறிடாம். மேஜர் போர்ப்ஸ் என்ற சரித்திர நிபுணர் சிங்கள மொழியிலிருந்து பிறந்ததென்று கொண்டு பால்சீய மண்டலம் (கீழ் நாடு) என்று பொருள்படும் என்கிறார். இது பாலிசிமந்த என்றவடமொழிப்பதத்தினின்றும் பிறந்த பெயரென்றும் தரும நூல் தலைமை என்று பொருள்படுமென்றும் இன்னொருவர் கூறுகிறார்.

பாலாவி மன்று என்றால் பாலாவி ஓடும்வெளியிடம் பாலாவி மன்று என்பதைப் பாலாசி முண்டென்று கிரேக்கர்கள் வழங்கியிருக்கவேண்டுமென்கிறார் சிவம் கருணாலயப் பாண்டியப் புலவர். பாலாவி மன்று என்று ஓரிடத்தின் பெயராக இருந்ததையே இலங்கை முழுவதற்கும் பெயராகக் கிரேக்கர்கள் வைத்துக் கொண்டிருக்கலாம். இந்தியா என்பதும் கிரேக்கர்கள் இப்படியே இட்ட பெயர்தான். மண்டி என்பது மன்று என்று திரிந்து முண்டென்று சிதைந்திருக்கலாம். நீலகிரியைச் சேர்ந்த மன்று என்ற பல ஊர்களின் பெயர்கள் உதக மண்டு என்பதுபோல் மண்டென்று வழங்குவதை ஞாபகத்தில் வைக்கவேண்டும்

'தாபிரபன என்ற பழம் பெயர் பூண்ட தீவை இப்போது சாலிக என்று குறிக்கிறோம்' என்று தொலமி என்பவர் எழுதியிருக்கிறார். சலாவ அல்லது சாலியர் என்ற ஒருவகைச் சாதி இலங்கையில் உண்டு, இவர்கள் இலங்கைக்கே சிறப்பாக உரியவர்கள்.

முன்னொரு காலத்தில் கூலியாட்களாகவும் பின்பு கறுவாப்பட்டை உரிக்கும் தொழிலாளர்களாகவும் இவர்கள் வாழ்ந்துவந்தார்கள்,

> "தனக்குக் கிடைத்த அற்பமான வசதிகளைப் பயன்படுத்தி அவர்கள் ஆற்றிய தொண்டின் பரந்த—நிரந்தரத் தன்மையைக் கொண்டு கணிக்கும்போது, மக்கா நபியின் பெயரைப் போல் ஒளி வீசும் பெயர் உலக வரலாற்றில் வேறில்லை எனலாம்."
>
> J. W. H. ஸ்டோபார்ட்

**முகப்பில்...**

**தணலில் தங்கத்தில் ஒரு காட்சி**

இவர்களுடைய வரலாறு பலபடத் திரிந்து வழங்குவதால் உண்மை வரலாறு தெரியவில்லை. சாலிய என்பது சீலம் அல்லது சீழம் என்றசொல்லின் மரூஉ என்பாரும் உண்டு. மலையாளத்தார் இதைச் 'சைலத்த' என்று பெயரிட்டழைத்தார்கள்.

சலாபம் என்பதற்கு முத்துக் குளித்தல் என்று பொருள். இந்தப் பெயரால் இந்தத் தொழிற் சிறப்பு மிகுந்த பட்டினமும் இலங்கையில் உண்டு. முத்துக்களாலும் வாசனைத் திரவியங்களாலும் லாபத்தை உண்டாக்கித் தன்னகத்தே பிறதேசத்து வணிகர்களை இழுக்கும் ஆற்றல்வாய்ந்த தீவு என்ற கருத்தில், சலா தீபம் என்றும் இலங்கைக்கு ஒரு பெயர் உண்டு.

அராபிய ஆசிரியர்கள் இட்டழைத்த பெயர் 'செரண்டிப்' என்பது. 'டிவிஸ்' என்ற சொல் தீவு என்னும் பொருள் உள்ளது இதுவே பின்பு மருவி ஸிலோன் என்றாயிற்றாம்.

முதல் புத்தரான சாகுசந்தர் காலத்தில் இந்தத் தீவு ஒச்ச தீவம் எனவும், கோணகம்ம புத்தர் காலத்தில் வரதுவீபம் எனவும், காசியப் புத்தர் காலத்தில் மத துவீபம் எனவும் வழங்கி வந்ததென்று மகாவம்சம் குறிப்பிடுகிறது. புத்தரின் விரிவான வரலாற்று நூல்கள் அவர் இலங்கைக்கு வந்த வரலாற்றைக் கூறவில்லையென்று கருதுகிறார் சில ஆராய்ச்சியாளர், ஓபிர், தர்ஷிஸ் என்று எபிரேயர் குறிப்பிட்ட இடத்தின் ஒரு பகுதி இலங்கை என்றும், சாலமோன் அரசன் தன் கப்பற்படைமூலம் பொன், வெள்ளி யானை, மயில் தோகை முதலியவற்றை இங்கேயிருந்து பெற்றானென்றும் சொல்கிறார்கள் சிலர். சயாம் தேசத்தவர் இதைத் 'தேவலங்கா என்று வழங்குகிறார்கள்.

★

# உலையில் தங்கம்

**7**

**அம்மாவும்** அப்பாவும் ஊருக்குப் போய்விட்டதும். என் மனமும் கூட அவர்களுடனேயே போய்விட்டதைப் போல் உணர்ந்தேன். அன்று இரவு உறக்கம் வராமல் ஏதேதோ எண்ணிக் குழம்பிக்கிடந்தேன்.

அன்பான கணவர் என்று முதலில் நான் எண்ணி ஏமாந்தேன். நான் எண்ணி ஏமாந்தது கிடக்கட்டும். அப்பாவும் அல்லவா ஏமாந்துவிட்டார்; என் வாழ்வே தன் வாழ்வு என்று எண்ணிக்கொண்டிருந்த அம்மாவும் ஏமாந்துவிட்டாள். என்றோ ஒரு நாள் பலரிடையில் பார்த்து நல்லவர் கெட்டவர் என்று தீர்மானம் செய்து வாழ்க்கைப் பிணைப்பு ஏற்படுத்திக்கொண்டு இப்படித் திண்டாட நேருகின்றதே என்று நொந்து கொண்டேன்.

எடையையும் உயரத்தையும் அளந்து சொல்லும் கருவிகள் போல் மனத்தின் திண்மையையும், பண்பாட்டின் செம்மையையும் அளந்து 'இது இவ்வளவு' என்று சொல்லிடும் ஆற்றல் பெற்ற கருவிகள் இருந்தால் எவ்வளவு நல்லது என்று எண்ணினேன். ஆனால் அதிலேயும் ஒரு தடை இருக்கின்றது. எவ்வளவு பொல்லாதவனும் கன்நெஞ்சனும் முதன்முதலில் யாருடன் பழக நேரினும் நல்லவன் போல் நடிக்க முடிகின்றது. சற்று நேரம்தானே என்ற நினைப்பு அவர்களுக்குச் சில கட்டுப்பாடுகளை உண்டாக்குகின்றது. அது போல் மனத்தின் நன்மை தீமை உணர்த்தும் பொறியிடம் அணுகும் போது மட்டும் தீமைகலவாத தூயவர் போல் நடித்திட்டால் என்ன செய்வது? உண்மை அப்போதும் துலங்குவதற்கு வழியில்லாமல் திண்டாட வேண்டியதுதான்.

மனம் என்ற பொருள் கண்ணுக்கு எட்டாமல் எங்கோ மறைந்து இருந்து கொண்டிருக்கின்ற வரை அதன் போக்கும் புலமும் நமக்கு எப்படித் தெரியும்? இதுபோல் அல்லல்பட வேண்டியதுதான் என்று ஆறினேன்.

நெடுநேரம் செயலற்றுக் கிடந்தேன். உறக்கம் என்னை அணுகவே இல்லை.

எங்கோ இரண்டு தெருநாய்கள் மாறி மாறிக் குலைப்பதும் உறுமுவது மான ஒலி தெளிவாகக் கேட்டது. வயல் வெளிகளில் அறுக்கப்பதமாக இருந்த நெற்கதிர்களைக் கள்வரிடமிருந்து பாதுகாக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் அடிக்கொருமுறை கூவிய ஒலியும் மெல்லக் கேட்டது. அந்த ஒலிகளில் ஓரகத்தியின் கணவருடைய ஒலியும் கலந்திருக்கும். அவரும் இரவு உண்டதும் வயலுக்குத் தான் போய்விட்டார். தெருக்கோடியிலிருந்த அரசமரத்தில் பழங்களை

**மா. கி. தசரதன்**

உண்ணுவதற்காக வந்த வௌவாலின் ஒலி கேட்டு அங்கே இருந்த காக்கைகள் எழுந்து காகா எனக் கத்தி அடங்கின.

உழைத்து உழைத்து அலுத்துப் போகும் தொழிலாளர் பகுதியினின்றும் தெருக்கூத்து இசையும் பேச்சும் கலந்து கலந்து கேட்டன.

எதிர்வீட்டுக் கடிகாரத்தில் மணி அடித்தது. பட்டினமாக இருந்தால் அந்த ஒலி எனக்குக் கேட்டிருக்காது தான். ஆனால் இந்தக் கிராமத்து அமைதியில் பகலிலேயே அந்த ஒலி கேட்பது உண்டு. இரவின் ஆழ்ந்த அமைதியில் அந்த மணி ஒலி மிகத் தெளிவாகக் கேட்டது. ஒன்று இரண்டு என எண்ணினேன், பன்னிரண்டு அடித்து ஓய்ந்தது. இன்னும் உறக்கம் வரவில்லையே என அலுத்துக்கொண்டவாறு மீண்டும் புரண்டு படுத்தேன்.

கூடத்தில் படுத்திருந்த ஓரகத்தி உறக்கத்தில் வாய்பிதற்றினாள்.

"நானா...மெய்யாகவா...முடியுமா... வரட்டுமா....சேர்த்துவிடுவாயா... ஏமாற்றாதே" என்ற சொற்கள் கேட்டன. நான் ஏதும் புரியாமல் திகைத்தேன். மீண்டும் அவள் வெருவல்.

"வருகிறேன் பொன்னு வருகிறேன்"

என்ற சொற்களைக் கேட்டதும்தான் எனக்கு உண்மை தெளிவாக விளங்கியது.

அந்தப் பச்சையம்மாவின் தம்பி விரித்த வலையில் இந்தப் பேதை மயங்கி வீழ்ந்துவிட்டாளே என நடுங்கினேன்.

அச்சமூட்டும் நள்ளிரவின் அமைதியில் என் துன்பத்திற்காக அலமந்து கிடந்த நான் ஓரகத்தியை எண்ணிப் பரிதாபப்பட்டேன். அவள் எனக்கிழைத்த கொடுமைகளும் அவளால் என் வாழ்வு பெற்ற சீரழிவும் என் மனதில் அவள்மீது ஆத்திரத்தை எழுப்பி இருந்தன என்றாலும் அந்த நேரத்தில் அவளுக்காக நான் அடைந்த அநுதாப உணர்ச்சியே மேலோங்கி நின்றது. நிம்மதியான வாழ்வுக்கான எல்லா வசதிகளும் கிடைத்தும் இந்தப் பேதை நிலைக்காத வாழ்வுக்காக ஏங்கித் தவித்து வாடிப் போகிறாளே என்று வருந்தினேன்.

துன்பமோ இன்பமோ ஏதோ ஓரளவு வரைதான் மனம் அதைத் தாங்கிக்கொள்ளும் போல் தோன்றுகின்றது. உடலின் இயக்கத்தையும் கொஞ்ச நேரம்தான் மனதினால் கட்டுப்படுத்தி வைத்திருக்க முடிகின்றது. பலவிதமான எண்ணங்களினால் தாக்குண்டு தவித்துக்கொண்டிருந்த நான் எப்படியோ உறக்கம்வர உறங்கி விட்டிருக்கிறேன் போலிருக்கின்றது. ஏதோ கனவு கண்டேன். என்ன கனவு என்று தெளிவாகச் சொல்ல இயலவில்லை.

அந்தக் கனவினால் உறக்கம் கலைந்தபோது கூடத்தில் குசுகுசு எனப் பேசும் ஒலி கேட்டது. மெல்ல

எழுந்து வந்து சாவித் துளையின் வாயிலாகப் பார்த்தேன். இருளில் உருவங்கள் தெளிவாகத் தெரிய வில்லை என்றாலும், குரலிலிருந்தும் இயலில் இருந்தும் என் கணவரும் ஓரகத்தியும்தான் எனத்தெளிந்தேன்.

சூழ்ந்திருந்த இருளில் அவர்களு டைய முகத்தில் பரவி இருந்த உணர்ச்சிகளைக் கண்டறிய இயலாது போயிற்று. ஆனால் பேச்சின்வேகத்தி லிருந்து கணவருடைய கோபம் எல்லையை எட்டியது என்று உணர்ந் தேன். கணவர் கையை ஆட்டி ஆட்டி ஏதோ சொல்லச் சொல்ல அவள் தலையை ஆட்டிக்கொண்டிருந்தது மட்டும்தான் எனக்குத் தெரிந்தது. கணவர் என்ன கேட்டார் அதற்கு அவள் என்ன கூறினாள் என்று ஒன்றனையும் அறியாமல் திண்டாடி னேன்.

செங்கமலக் கிழவியின் மூலம் சேதி யைக் கேட்டறிவதற்கு முன் ஊரெல் லாம் உறங்கும் நள்ளிரவில் வீட்டிற் குள் இப்படி நடந்ததைப் பார்த்திருந் தால் அஞ்சி நடுங்கி இருப்பேன். என்னவோ ஏதோ என்று கதவைத் திறந்துகொண்டு ஓடிவந்து 'உதவி தேவையா?' என்று கேட்டிருப்பேன்.

கணவரும் ஓரகத்தியும் கரவுடைய வர்கள் என்பதைத்தெரிந்துகொண்ட தும் கதவிடுக்கிற்குள் மறைந்து ஒட்டிக்கேட்க மனம் விழைந்ததே தவிர வேறு எண்ணவில்லை. அவர் கள் என்ன பேசிடுகின்றனர் என் பதை அவர்கள் அறியாமல் கேட்க விழைந்தேன். உற்றுக் கேட்டும் என் முயற்சி பலன் தரவில்லை. ''பொன்னு சாமி—சேர்க்காதே'' என்ற சொற் களே கணவர் கோபமாகப் பேசிய போதுமட்டும் என் செவிக்கு எட்டின. கணவர் மீண்டும் தெருத்திண்ணைக் குப் போய்விட்டார். ஓரகத்தியும் உறங்கிவிட்டாள் போல் இருக்கிறது. சற்று நேரத்திற்கெல்லாம் ஓரகத்தி இரண்டு முறை இருமினாள். இருமல் பலமாகியது. மூச்சுத் திணறும் ஒலி யும் தெளிவாகக் கேட்டது. எழுந்து சென்று பார்த்து உதவலாமா என்று மனம் விரும்பியது. ஆனால் போனால் என்ன சொல்லுவாளோ என்று அடங்கிவிட்டேன்.

அன்றிரவு மறுபடியும் ஒருமுறை ஓரகத்தியின் இருமல் ஒலி விட்டு விட்டுக் கேட்டது. 'என்னவோ உடம்புக்கு' என்று எண்ணி வருந்தி னேன்.

காலையில் விழித்து எழுந்தபோது உடல் ஒரே சோர்வாக இருந்தது ஓரகத்தியின் முகத்தைப் பார்த்தேன். அங்கே கவலையின் உருவைக் கண் டேன். அலுத்த தோற்றத்தோடு காணப்பட்டாள் அவள்.

இரவு நடந்த நாடகத்தைப்பற்றி ஒன்றுமே அறியாதவள் போல் நான் என்றும்போல் இயங்கினேன். கணவ ரும் ஓரகத்தியும் எப்போதும் போலவே இடையில் ஒன்றுமே நடவாதது போலவே நடந்துகொண் டனர். நேற்றிரவு நான் உறங்கி விட்டிருந்தால் எனக்கும் தான் என்ன தெரிந்திருக்கப் போகிறது? மேலே காணும் தோற்றத்திற்கும் உள்ள இருக்கும் இயல்புக்கும் அம்மவோ எத்துணை வேறுபாடு!

வெளியில் காணுமளவு கணவர் இயல்புகளில் ஒன்றும் மாற்றங்கள் புலப்படவில்லை என்றாலும் என் மனம் மட்டும் அவரிடம் ஏதோ மாற்றம் நிகழ்வதாக எண்ணியது. இத்துணை நாட்களைப்போல் இல்லாமல் என் மீது அவர் அன்பு நோக்கு பாய்வதாக உணர்ந்தேன். என் பேதை நெஞ்சம் எப்படி எண்ணி ஆறுதல் பெற நினைத் திருக்கலாம் ஆனால் உண்மையில் அவர் வன்நெஞ்சம் நெகிழ்ந்தது வாஞ்சை பிறந்ததா என்பதை நான் அறிந்து கொள்ள இயலவில்லை. நெருங்கிப் பழகி நட்பை வளர்த்துக் கொண்டிருக்கும் போதே ஒரு ஒரு வேளைகளில் உள்மனத்தின் உண்மை கள் புலனாவதில்லையே, பழகாமலும் நெருங்காமலும் தொலைவிலேயே நின்று ஏங்கித் தவிக்கும் போது எப் படி அது அன்புதானா என்பதை அளந்தறிவது?

அப்படியே கணவருடைய மனதில் அன்பு கசிகின்றது என்றாலும் அதை உடனே வெளிப்படுத்தி மகிழ வாய்ப் பில்லாமல் திண்டாடுகின்றாரோ என்று எண்ணினேன்.

எனக்கிழைத்த தீமைகளை எண்ணி வருந்தி என்பால் அன்பு காட்டும் நன்மனம் இல்லாது போனாலும் ஓரகத்தியிடம் வளர்ந்திருக்கும் வெறுப்பாவது என்மீது அன்பு பிறக் கச்செய்யும் என்று எண்ணினேன்.

இவ்வளவும் நானாக நினைத்துக் கொண்டதுதான். மணமான புதிதில் வாய் மணக்க அழைத்து, அன்பு மழை யில் என்னை நனைத்து அரவணைத் திருந்ததில் ஒரு கூறுகூட இப்போது எங்களிடையில் நெருக்கம் இருக்க வில்லை. ஆனாலும் புறக்கணிப்பையே நாள்தோறும் பெரும் பரிசாகப் பெற்று வரும் நான் ''கலம் எடுத்து வை'' என்று சொன்ன அவர் சொற் களின்றும் இதை எல்லாம் எண்ணி இறுமாந்தேன்.

சிறு பிள்ளைகள் மணல் வீடு கட்டி விளையாடும்போது பார்த்திருக்கின் றேன். ஏதேனும் ஒரு தோழியிடம் பூசல் இட்டுக்கொண்டு 'காய்' விட்ட தும் மற்றொருத்தியிடம் போய்விளை யாடும். அங்கும் பகை ஏற்பட்டு 'காய்' ஆகிவிட்டால் முதலில் 'காய்' விட்ட தோழியிடமே வந்து விளையா டத் தொடங்குவார்கள். சிறு பிள்ளை களுக்கு இருக்கும் இந்த வழக்கம் தான் வளர்ந்த பிறகும் பலரிடம் காணப்படுகின்றது.

அம்மா அடித்தால் அப்பாவிடமும், அப்பா திட்டினால் அம்மாவிடமும் தாவி ஆறுதல் பெற முயற்சிக்கும் பிள்ளை மனம் வளர்ந்த பின்னும் மாறுவதில்லை.

நண்பர்களுக்குள் இவரிடமும் அவ ரிடமுமாக மாறிமாறி அலையும் வேலை யைத்தான் மனம் செய்கின்றது.

திருக் குறள் சொற்பொழிவு செய்த போது ஒருவர் சொல்லக் கேட்டிருக் கிறேன், மலர்தலும் கூம்பலும் இல் லாமல் இருப்பதுதான் அறிவுடைமை என்று. யாரால் அப்படி முடியும்? அறிவு பெருகி ஆழ்ந்த அநுபவமும் பெற்று மனமும் நல்லபடி இருப்பவர் களுக்கு முடியும். சாதாரணமானவர் கள் எப்படி இன்பத்தையும் துன்பத் தையும் ஒன்றாக நினைத்து மனம் தேறி அமைதியாகிவிடமுடியும். அதி லும் கணவரைப்போல் நல்லது கெட்டது சிந்திக்காமல் வெறும் உணர்ச்சிக்கு மட்டும் அடிமையாக இருப்பவர்களிடம் எப்படி அதைப் போன்ற நிலையை எதிர்பார்ப்பது?

'கலம் எடுத்துவை' என்று கண வன் இடும் கட்டளையில் அன்பு என்னகரைபுரள்கின்றது என்றுதான் எவரும் எண்ணுவர். ஆனால் என் நிலையில் இருந்து துன்பப்பட்டவர் களுக்கே தெரியும் அந்தக் கட்டளை தரும் இன்பம்.

## பிறப்பு

இரங்கூனிலுள்ள நமது இயக்கத் தோழர் கே. எம். கணபதி அவர்களின் துணைவியார் இராஜேஸ்வரிக்கு ஓர் ஆண் குழந்தை 12-10-56ல் பிறந்து, தாயும், சேயும் நலம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள் கிறோம்.

நானும் ஒருத்தி இருக்கின்றேன் என்ற நினைப்பு கணவருக்கு இருக்கிறது என்ற எண்ணமே எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

அந்த மகிழ்ச்சியில் மிதந்தபடியே கலத்தைக் கழுவிக்கொண்டிருக்கும் போதே பச்சையம்மாவின் தம்பி வருவதைக் கண்டேன்.

இதுவரை மயங்கிக்கிடப்பவள் போல் கட்டிலில் படுத்துக்கிடந்த ஓரகத்தி அவனைக் கண்டதும் துள்ளி எழுந்து வரவேற்று உபசரிப்பாள் என்று எண்ணினேன். கனவிலும்கூட அவன் நினைவாகக் கிடப்பவள் அவனைக் கண்டதும் களித்து மகிழுவாள் என்றுதான் எண்ணினேன். ஆனால் நான் எண்ணியதற்கு மாறாக அவள் அசையாமல் படுத்துக்கிடந்தாள்.

வந்ததும் கீழேயே உட்கார்ந்து கொண்டு, "என்ன அத்தை உடம்புக்கு ஏன் படுத்திருக்கின்றீர்கள்?" என்று கேட்டான்.

"என்ன எனக்கு வந்தது கேடு ஏதாவது வந்தால்தான் நல்ல தாயிற்றே"

"என்ன அப்படிச் சலித்துக் கொள்ளுகின்றீர்கள்? உலகத்தில் ஏன் அப்படி வெறுப்புவந்துவிட்டது?" என்றான்.

"உனக்கென்ன சொல்வதற்கு எனக்கல்லவா தெரியும் என் வருத்தம்" என்று சொல்லிக்கொண்டே சமையல் அறைக்குள் வந்து கணவருக்கு உணவு படைக்கும் தொழிலில் தானே வலிய ஈடுபட்டாள்.

இதேது தொல்லையாகப் போய் விட்டதே என்று எண்ணி சற்று தள்ளி நின்றேன்.

"நான் பார்த்துக்கொள்ளுகின்றேன், நீபோ" என்று என்னை அங்கிருந்து விரட்டினான்.

போவதா வேண்டாமா என்று புரியாமல் குழம்பியவாறு கணவர் முகத்தைக் கண்டேன், அவர் என்ன குறிப்பு காட்டுகின்றார் என்று அறிய.

என்னவென்று சொல்வது! ஒன்றுமே விளங்காத உணர்ச்சியற்ற முக பாவத்தைத்தான் கண்டேன். 'கலம் எடுத்துவை' என்றபோது உண்மையில் நான் என்மீது அன்பு கொண்டுதான் அதைச் சொன்னார் என்று இறுமாந்தேன். ஆனால் இதோ சற்றைக்கெல்லாம் ஓரகத்தி வந்த உடன் அன்பு பறந்து அயலவர் போல் நடந்துகொண்டார். இதைப் போய் நான் பெருமையாக எண்ணிக் குதூகலம் கொண்டேன். என் குதூகலம் குலைந்து சோகம்தான் நிலைத்தது.

ஓரகத்தியுடன் இரவு இட்ட பூசலினால் என்னைக் கலம் எடுக்கச் சொன்னார். அந்தப் பூசலை மறந்து அவள் உறவு கொண்டாடியதும் என்னைப் புது ஆளாகக் கருதினார். இதைப் புரிந்துகொள்ளாமல் நான் கொஞ்ச நேரம் வானத்தில் பறந்துவிட்டேன்.

நேற்று இரவு ஓரகத்தியுடன் 'காய்' விட்டதும் என்னிடம் கட்டளை இட்டார். ஓரகத்தி 'பழம்' ஆனதும் நான் 'காய்' ஆகிவிட்டேன். இந்தப் பிள்ளை விளையாட்டில் என் பேதை மனம் கொஞ்ச நேரத்தில் இன்பம் கண்டுவிட்டது.

இதைப்போலவே இப்படியும் அப்படியுமாக என் வாழ்க்கை பல நாட்கள் கழிந்தன. கணவரிடம் அன்பு காணும் பேறு இன்று கிடைத்ததே என்று களிப்படைவதற்குள் ஓரகத்தியின் கடுத்த முகம் என்னைச் சுட்டெரித்துவிடும். கணவரும் காட்டிய அன்புக்கு இரட்டையாக வெறுப்பை வெளிப்படுத்துவார். கையில் தின்பண்டத்தை வைத்துக்கொண்டு குழந்தையின் வாயருகே அதைக் கொணர்ந்து கொணர்ந்து காட்டிக் காட்டித் தராமல் எடுத்துச் சென்று ஏமாற்றி விளையாடி மகிழ்வதைப் போல் எனக்கும் கணவர் அன்பு என்ற பண்டம் கிடைக்கும் என்று எண்ணி எண்ணி ஏங்கித் தவிக்கும் வாழ்வுதான் வாய்த்தது.

குழந்தையை ஏமாற்றுகின்றவர்கள் வெறும் விளையாட்டைத்தான் விரும்புகின்றார்கள். இறுதியில் மிகுதியான பங்கைத் தருகின்றார்கள். ஆனால் எனக்கோ இது விளையாட்டாக இருக்கவில்லை. வேதனையாக இருந்தது.

பச்சையம்மாவின் தம்பி வந்த போதெல்லாம் ஓரகத்தி முன்போல் அவனிடம் பேசிப் பழகுவதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டுவந்தாள்.

இனி குடும்பம் சீர்பட்டுவிடும், நல்ல வாழ்வு துலங்கும் என்று எண்ணிக் கிடந்தேன். எனக்கென்ன தெரியும் புலி பதுங்குவது எல்லாம் பாய்வதற்குத்தான் என்று!

(தொடரும்)

## வினோபா கூறுகிறார்

**கேள்வி:-** பாபா, மொழிவழி பிரிந்த தமிழ் நாட்டிற்கு 'தமிழ் நாடு' என்று பெயர் சூட்டுவதைப்பற்றி தங்களின் கருத்து என்ன?

**பாபா:-** நிச்சயமாக தமிழ்மொழி பேசும் நிலப்பரப்பிற்கு 'தமிழ் நாடு' என்றுதான் பெயர் சூட்ட வேண்டும்.

**கேள்வி:-** ஆனால் சென்னை அரசாங்கம் அப்பெயர் சூட்டத் தயங்குகிறதே?

**பாபா:-** பாரதியார் என்ன கூறியிருக்கிறார் என்று தெரியாதா? செந்தமிழ் நாடு என்று கூறும்பொழுதுதான் இன்பத் தேன் வந்து பாயும் என்று கூறுகிறார். உண்மையும்கூட. மெட்ராஸ் என்னும் போதினிலே என்ன வந்து பாய்கிறது காதில்?

**கேள்வி:-** தமிழ்நாடு என்று பெயர் வைத்தால் வெளிநாட்டாருக்குத் தெரியாமல் போய்விடும் என்று கூறுகிறார்களே?

**பாபா:-** அவர்களுக்குத் தெரியவேண்டிய அவசியமென்ன? வழக்காற்றில், நாள் செல்லச் செல்ல எல்லோரும் புரிந்துகொள்வார்கள் என்பது என் நம்பிக்கை.

# கேரளம்— சேரநாடே!

ஆங்கில ஆட்சி வேரூன்றுவதற்கு முன்பு கேரளம் மூன்று துண்டாகப் பிரிந்திருந்தது. அந்தக் காலத்தில் ஏற்பட்ட இந்தப் பிரிவினைதான் அந்நியர் ஆட்சி நிலைக்கக் காரணம். இந்தப் பிரிவினையில் கேரளம் முழுவதும் சேரவில்லை. ஆயினும், ஐக்கிய கேரளம் ஏற்படப்போகும் இந்தச் சந்தர்ப்பத்தில் அதன் பழைய சரித்திரத்தை நினைவு கூர்வது பொருத்தம்.

கேரளத்தின் பழைய சரித்திரத்தை விளக்கும் நூல்கள் மலையாள மொழியிலே இல்லை. ஆனால் பழந்தமிழ் நூல்களில் கேரள சரித்திரம் பரவிக் கிடக்கிறது. சங்க காலத்து நூல்கள் இதில் பெரும் பங்கு எடுத்துக் கொண்டிருக்கின்றன.

சேர, சோழ, பாண்டியர் என்ற மூவரும் பழந்தமிழ் இலக்கியங்கள் கொண்டாடும் மூவேந்தராவர். இதில் சேர மன்னர் சேர்ந்திருப்பது அவர் தமிழுக்கும், தமிழ்க் கவிஞர்களுக்கும் செய்துவந்த பணியையும் கொடையையும் விளக்குகிறது. மேலும், தமிழிலிருந்துதான் மலையாள மொழி உருப்பெற்றது என்பது நம்பத்தகுந்த ஒரு வாதம். ஆகவே, தமிழ்த் தொண்டாற்றிய சேர மன்னரின் காலத்தில் மலையாள மொழி உருவாகவில்லை என்றோ, அல்லது தமிழிலிருந்து முற்றும் தனித்த வேற்றுருவம் பெறவில்லை என்றோ ஊகம் செய்ய இடம் உண்டு. எப்படியானாலும் பழந்தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அந்த மன்னர்கள் ஆக்கம் அளித்திருப்பது தெள்ளத் தெளிந்த விஷயம். இந்த மூவேந்தரும் இலக்கிய நாயகர்கள். அப்படிப்பட்ட மகான்களில் ஒருவராவர் பெருஞ்சேரல் இரும்பொறை.

புராதன சேரமன்னர் பரம்பரையில் செல்வக் கடுங்கோவாழியாதன் எட்டாவது சக்கரவர்த்தியாக இருந்தார். அவருடைய மகன்தான் பெருஞ்சேரல் இரும்பொறை என்பவர். இவர் ஒன்பதாவது சேர சக்கரவர்த்தியாகப் பதினேழு ஆண்டுகள் அரசுபுரிந்தார்.

இந்த மன்னர் அரச கடமைகளைப் பின்பற்றி முதலில் தம் பகைவரை வென்று கீழ்ப்படியச் செய்தார். சேர மன்னருக்கு அடிபணிந்து வரி கொடுத்திருந்த நாடுகளில் ஒன்றாகும் 'காமூர்' என்பது. அதன் புதிய அரசரான 'கழுவுள்' என்பவர் சேர மன்னருக்கு வரி கொடுக்க மறுக்கவே, பெருஞ்சேரல் இரும்பொறை போர் தொடுத்தார்.

காமூர் அரசர் மிகுந்த பலசாலி. அந்த நாட்டில் ஏராளமான ஆடு மாடுகள் இருந்தன. அவற்றை வைத்து ஆதரித்து வரும் இடையர்கள்தான் அங்கே குடிகள். அந்த அரசர் மிகுந்த வீரம் உள்ளவர். சேர மன்னர் கழுவுளுடன் மல்ல யுத்தம் செய்து அவரைக் கொன்று வெற்றி வாகை சூடினார். அந்த இடத்து மக்கள் குறும்பர் நாட்டில் புகுந்துகொண்டார்கள். குறும்ப மன்னன் சேர மன்னருக்குச் சிற்றரசன் அல்லன், ஆயினும் அவரிடம் பயந்தவன். ஆகவே சேர மன்னருக்கு வரிகட்டுவதாக ஒப்புக்கொண்டு காமூர் மக்களுக்குச் சரணமளித்தான்.

> புதிய கேரளம் அமைகிறது!
>
> தமிழகமும் கேரளமும் வேவ்வேறு நாடுகளாகின்றன!
>
> ஆனால் முன்பு...! கேரளம் என்பது சேரநாடுதான் என்பதைத் தமிழ் காப்பியங்கள் காட்டுகின்றன.
>
> இதனை 'கேரளபூமி' எனும் மலையாள ஏடு தந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அதியமானோடு பெருஞ்சேரல்இரும்பொறை செய்த போர்தான் மிகப் பிரசித்தம். அதியமான் தன் அயல் நாடான திருக்கோவலூரைக் கைப்பற்றி அதன் அரசராகிய 'திருமுடிக் காரி' என்பவரை நாட்டைவிட்டுத் துரத்திவிட்டான். உடனே அவர் தம் நண்பரான சேர மன்னரைச் சரண் புகுந்து, "என் மானத்தையும் மண்ணையும் மீட்டுக்கொடுக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். அதியமானோடு சேர மன்னர் போர் தொடுக்கு முன் அவனுடைய சிறந்த நண்பனும் தம் பகைவனுமான 'ஓரி'க்கு எதிராகப் படையெடுக்கத் தீர்மானித்தார். 'ஓரியின் கொல்லிமலை நாட்டைக் கைப்பற்றினால், ஓரி போரிடும்போது அதியமானும் அவனுக்கு உதவ முன்வருவான். இருவரையும் ஒரே போரில் வென்றுவிடலாம்' என்று சேர மன்னர் எண்ணினார்.

பாண்டிய-சோழ மன்னர்கள் ஓரிக்கு உதவ முன் வருவார்கள் என்றும், ஆதலால் தம் எண்ணம் ஈடேறுவது அவ்வளவு எளிதல்ல என்றும் அவருக்குத் தெரியும். ஆயினும் சுத்த வீரரான பெருஞ்சேரல் இரும்பொறை கொல்லிமலை நாட்டை தம்முடைய படைகளுடன் போய்த் தாக்கினார். சோழ-பாண்டியருடனும் அதியமானுடனும் ஓரி சேர்ந்து வந்து சேர மன்னரை எதிர்த்தான். கடும்போர் நிகழ்ந்தது. 'அது போர்க்களமல்ல; பிணக்காடாக இருந்தது' என்று கவிஞர்கள் வர்ணித்திருக்கிறார்கள். முடிவில் வள்ளல் வல்வில் ஓரி மரணம் அடைந்தார். சோழ-பாண்டிய மன்னர்கள் தம் நாடுகளுக்கு ஓடிவிட்டார்கள். அதியமான் தன் நெடுங் கோட்டைக்குள் புகுந்து மறைந்து கொண்டான். சேர மன்னர் அவனை விடாமல் பின்தொடர்ந்து போய் அந்தக் கோட்டையை வளைத்துக்கொண்டார். பல மாதங்கள் வெளிவரவேயில்லை.

போரில் பயம் கொண்ட அதியமானைத் தமிழ்க் கவியரசியாகிய ஔவையார், 'மலைக் குகையில் வாழும் புலி சீறுமாயில், அதனை எதிர்த்து நிற்க வல்ல மான் கூட்டமும் உண்டோ? இல்லையன்றோ; அதுபோலப் பெருவீரனான நீ போர்க்களம் சென்றால் உன்னை எதிர்த்து நிற்கும் வீரரும் உண்டோ!' என்று கூறிப் போர் செய்யத் தூண்டுகிறாள். தன்மானமுடைய அதியமான் பெருஞ் சேனையுடன் வெளிப்பட்டுப் போர் செய்து முடிவில் சேர மன்னரிடம் அடிபட்டு மாண்டான். வெற்றி மாலை சூடிச் சேர மன்னர் 'தகடூரெறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை' என்ற பட்டம் பெற்றார்.

அரிசில் கிழார் என்ற மகா கவி இந்தச் சேர மன்னரைக் குறித்துச் சில கவிகள் பாடியிருக்கிறார். 'பதிற்றுப் பத்து' என்ற செந்தமிழ் நூலில் எட்டாம் பத்தியில் இந்தக் கவிகள் அடங்கியிருக்கின்றன. இவை மிகவும் அழகானவை. அரசர் அந்தக் கவிஞரை எப்படிக் கௌரவிப்பது என்று புரியாமல் யோசனையில் ஆழ்ந்தார். முடிவில் தகருக்கு வெளியே இருக்கும் கவிஞரிடம் பட்டத்தரசியோடு சென்று சேர ராஜ்யம் முழுவதையும் ஏற்கவேண்டும்என்றுகேட்டுக்கொண்டார். அரசரையும் சேர நாட்டையும் கவிஞர் வாழ்த்தினாரே தவிர, ராஜ்யத்தை ஏற்கவில்லை. முடிவில் பெருஞ்சேரல் இரும்பொறை அந்தக் கவிஞரை தம்முடைய மந்திரிகளில் ஒருவராக இருக்கவேண்டும்என்று கேட்டுத் தம் சபையில் அவரை இருக்கச் செய்துகொண்டார்.

★

# முதுகெலும்பு ஒடிந்த பிறகு!

திரு. நேரு சமீபத்தில் டில்லிக்கு அருகிலுள்ள ஆலிப்பூரில் நடத்திய ஓர் சொற்பொழிவில் நமது நாடானது பண்டையகாலத்துவழிகளிலேயே நடந்துகொண்டு வந்தபடியால் முன்னேறவில்லை. ஆனால் இப்பொழுது சுயராஜ்யம் வந்த பிறகு பல மாறுதல்கள் ஏற்பட்டு இருக்கின்றன. அவைகளை அனுசரித்து மக்கள் நடந்துகொள்ள வேண்டும். இன்னும் இரண்டு அல்லது மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறிய பிறகு நாட்டின் முகமே மாறிவிடுமென்று சொன்னாராம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஓர் ஆண்டு முடிவடைவதற்குள்ளாகவே நாட்டின் முகம் நன்றாக மாறியிருக்கிறதே. இன்னும் இதை எப்படி மாற்றுவது என்று சிலர் கேட்கலாம். மக்கள் வரிக்கொடுமை தாங்காமல் வதங்குகிறார்களே, நிலபாத்தியதைகளையெல்லாம் தலைகுப்புற மாற்றிவிட்டார்களே! இதிலிருந்தே முன்பிருந்த நாட்டிற்கும் இப்பொழுதிருக்கும் நாட்டிற்கும் அடையாளம் தெரியவில்லையே, சுபீட்சம் ஓடி துர்பிச்சம் கூத்தாடுகிறதே! இன்னும் நாட்டின் முகத்தை மாற்றவேண்டுமென்றால் கலர் பூசவேண்டியதுதான் என்றும்சிலர்சொல்கிறார்கள்.

மேலே சொல்லப்பட்ட அபிப்ராயங்கள் ஒருபுறமிருக்க, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பொருளாதாரங்களைச் சற்றுக் கவனிப்போம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முற்றிலும் நிறைவேற முன்பு உத்தேசித்ததைவிட இப்பொழுது பணம் அதிகமாகச் செலவாகுமென்று தெரிய வருகிறது. அதாவது 5200 கோடி ரூபாய் தேவையாக இருக்கும் என்று நிதி மந்திரி கனம் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் சொல்கிறார். பொருட்டான அன்னிய நாடுகளின் உதவிகளுமில்லாமல் ஏராளமாக கடன்களை (Public Debt) சுமத்திக்கொண்டு இந்தத் திட்டத்திற்கு பணம் சம்பாதிக்கவேண்டுமானால், மக்களிடத்திலிருக்கும் பணத்தை சர்க்கார் மீண்டும் கடன் வாங்கியும், அதிக வரிகள் போட்டும் நிதி சேகரிக்கவேண்டியிருக்கும். மக்களிடமிருந்து கடனாகவாங்கக்கூடிய தொகைகள் ஓரளவிற்குள் அடங்கியிருப்பதால் மென்மேலும் வரிகளும் போட்டுவந்தால்தான் இந்தத் திட்டத்திற்கு பணம் கிடைக்குமென்று சொல்வதில் தவறில்லை. காங்கிரஸ்காரர்கள் பல புதியவரித்திட்டங்களைத் தயாரித்து வைத்திருக்கிறார்கள். பொதுத் தேர்தல்கள் முடிந்த பிறகு இவைகள் ராமபாணம்போல், ஒன்றுக்குப்பின் ஒன்றாக புறப்படுமென்று திரு. முத்துசாமி வல்லத்தரசு எம். பி. திருச்சியில் 7—10—56ல் ஓர் சொற்பொழிவில் சொல்லியதுபோல், விஷயங்கள் இருக்கலாமென்றும் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஏற்கனவேயே சென்னையில் 13-கோடி ரூபாய்க்கு புது வரிகள் போடப்படுமென்று பத்திரிகைகளில் வந்த தகவல் எல்லோருக்கும்தெரிந்த விஷயம். இந்த வரிகள்தேர்தலுக்குப்பிறகுபோடப்படலாமென்று கருதவேண்டி இருக்கிறது. தேர்தலுக்குப் பிறகு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஓர் பகுதி பூர்த்தியாவதற்குள்ளாகவே அதிக வரிகளால் மக்களின் பொருளாதாரமுதுகெலும்பு ஒடிந்துபோய்விடும்போல் தருணம் மேற்பட்டுவிட்டால் மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது, ஆறாவது ஐந்தாண்டு திட்டங்களுக்கு என்ன செய்வது? திரு. நேருவானவர், நாட்டின் முன்னேற்றத்தை அதிகம் விரும்புகிறவர். ஒரு உண்மையான தேசாபிமானிதான், இருந்தாலும் மக்களின் பொருளாதார விஷயங்களில் மக்களுக்கு தாங்கும் சக்தி எவ்வளவுதானென்று இவர் நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். இதையறியாமல் இவர் ஓர் காலேஜ் புரபெசர்போல் சித்தாந்தம் பேசினால் போதாது! இந்த ஐந்தாண்டுத் திட்ட தொத்துநோய் நேருவை ரஷியாவிலிருந்து பிடித்துக்கொண்டிருக்க வேண்டுமென்று கருதுகிறோம். ஏனென்றால், ஸ்டாலின், அவரின் ஜீவித காலத்தில் பல ஐந்தாண்டுத்திட்டங்களை ரஷ்யாவில் நிறைவேற்றினார். தன்னுடைய (ஸ்டாலினுடைய) சர்வாதிகாரப் போக்கிற்கு மக்களை அடிமையாக்கி நசுக்கித் தன்னுடைய ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டார். அதே முறையில் இந்தியாவில் நேரு தன்னுடைய சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்ற விரும்புகிறாரா அல்லது முடியுமா? என்பது ஆலோசிக்கத் தக்கவிஷயமாக இருக்கிறது! ★

> நேரு பண்டிதரின் ஐந்தாண்டுத் திட்டங்கள், மக்களின் முதுகெலும்பை ஒடிப்பனவாக உள்ளன, என்ற கருத்தை அளிப்பது 'காங்கிரஸ்' எனும் கிழமை இதழ்.

## தமிழர் திருநாள்

தென்னாப்பிரிக்கா, பர்மா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் வாழ்கிற தமிழர்கள் மலாயாத் தமிழர்கள் காட்டிய வழியைப் பின்பற்ற முனைந்துள்ளனர்.

மலாயாவில் கடந்த ஐந்து ஆண்டுகளாக கொண்டாடப்பட்டு வருவதுபோன்று தமிழர் திருநாளைக் கொண்டாட அந்நாட்டுத் தமிழர்கள் ஆயத்தம் செய்து வருகின்றனர்.

இந்த ஆண்டு ஜனவரித் திங்களில் மேடானில் (இந்தோனேஷியா) வாழும் தமிழர்கள் திருநாள் கொண்டாடினர். வருகிற ஆண்டில் மேலும் சிறப்புறக் கொண்டாடத் திட்டம் தீட்டி வருகின்றனர்.

மற்ற வேறுபாடுகள் அனைத்தையும் மறந்து தமிழைத் தாய் மொழியாகக்கொண்ட மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தமிழர் திருநாள் கொண்டாடுவது சாலச் சிறந்ததென்றும் அம்முறையைத் தாங்களும் பின்பற்ற எண்ணுவதாயும் தென்னாப்பிரிக்காவில் இருந்தும், பர்மாவில் இருந்தும் சிங்கப்பூர் தமிழர் பிரதிநிதித்துவசபைத் தலைவருக்குக் கடிதங்கள் வந்திருக்கின்றன. அந்த இரண்டு தேசத் தமிழர்களும் தமிழர் திருநாள் பற்றிய முழுவிளக்கங்களைக் கேட்டிருக்கின்றனர்.

*6-ம் பக்கத் தொடர்ச்சி*

அறிவீரா? என்று வாதாடுவோர் உளர்! தம்பி! விரிந்து பரந்த மனப்பான்மையைத் தமிழருக்கு எவரும் புதிதாகக் கற்றுத்தர வேண்டியதில்லை! பாரில் இந்தப் பண்பு பேச்சளவுக்கேனும் வளருவதற்குப் பன்னெடுங் காலத்துக்கு முன்பே **யாதும் ஊரே, யாவரும் கேளிர்** என்று பாட்டு மொழியிற் கூறிய பண்பாளர் தமிழர்! எனவே, பரந்த மனப்பான்மையைத் தமிழர்க்கு அளித்திட ஆசான்கள் தேவை இல்லை—தமிழருக்கு அந்தப் பாடத்தைக் காட்டி, ஓர் பேரரசுக்குக் குற்றேவல் புரியும் எடுபிடியாக்கிடவே முனைகின்றனர் என்று ஐயப்பாட்டுக்கிடமின்றி தெரிகின்றபோது, எங்ஙனம் அதனை நீதிநெறி விளக்கமென்று கொள்ள முடியும்.

போராற்றலால் பெற்ற வெற்றிகளைப் பேரரசு அமைத்திடப் பயன்படுத்தியவர்களிலே பலரும், தமது இருப்புக் கரத்தின்மூலமே, அந்தப் பேரரசுகளை முடிந்தவரையில் கட்டிக் காத்தனர்—பிறகோ, தேசிய இன எழுச்சி சூறாவளியாகி, சாம்ராஜ்யங்களைச் சுக்குநூறாக்கிவிட்டிருக்கிறது.

கிரேக்க சாம்ராஜ்யம், 'ரோமானிய சாம்ராஜ்யம், உதுமானிய சாம்ராஜ்யம் என்பவைகளெல்லாம் இன்று பாட புத்தகங்கள்—படித்து அதுபோல் சாம்ராஜ்யங்கள் கட்டப் பயிற்சிபெற அல்ல—பேரரசு வேண்டும் என்று தோன்றும் மன அரிப்பை அடக்கிக்கொள்வதற்கான பாடம் பல பெற!!

நேரு பண்டிதர் இந்த உண்மைகளை நன்கு அறிவார் — அறிந்த காரணத்தாலேயே, அவர், மிகச் சாமர்த்தியமாக நடந்துகொள்வதாக எண்ணிக்கொண்டு, பல்வேறு முறைகளாலும், மறைமுக வழிகளாலும், பாரதம் எனும் பேரரசுக்குள்ளே அடைத்துவைக்கப்பட்டிருக்கும் பல்வேறு தேசிய இனங்களையும், தத்தமது தேசியத் தன்மையை, நினைப்பை, இழந்துவிடச் செய்யப் பார்க்கிறார். இதனை எதேச்சாதிகாரியின் குரலிலே அவர் கூறவில்லை — வரலாறு தெரிந்திருப்பதால்— இனிக்கப் பேசினால் இளித்துக் கிடப்பர் என்று திட்டமிட்டுக் காரியமாற்றி வருகிறார்! கேட்போருக்கு மனமயக்கம் ஏற்படச் செய்யும்விதமான பிரசாரம் நடத்தி, இந்தியா—இந்தியர் — என்பனபோன்ற கற்பனைகளைக் கவர்ச்சிகரமானதாக்கிக் காட்டி, போலித் தேசியப் போதையை ஊட்டி, தமிழர் போன்ற தேசிய இனத்தவர்களை, தாசர்களாக்கிடப் பார்க்கிறார். மொழி, கலை, ஆகியவற்றால் தனித்தன்மை பெற்றிருப்பதை அழித்திட இந்தியை ஏவுகிறார்—சல்லாபி வடிவத்தில்!! இந்தியை, அஞ்சல் நிலையத்திலும், அங்காடி அலுவலுக்கும், அரசாங்க காரியத்துக்கும், புகுத்தும் நேரத்திலேயும், தமிழ் என்ன சாமான்யமானதா, உயர் தனிச் செம்மொழி என்று மொழி வல்லுநர் பலர் கூறக் கேட்டுள்ளேன், இந்தி மொழி தமிழ் கொலுவிருக்கும் இடத்தருகேயும் வரத் தகுதியற்றது, என்றாலும், வசதிக்காக, நிர்வாக ஏற்பாட்டுக்காக, பாரதத்தின் ஐக்யத்துக்காக இந்தியைத் தேசிய மொழியாகக் கொள்ளத்தான்வேண்டும் என்று பேசுகிறார்.

கிழப்புலி பொன்காப்பு காட்டிய கதை படிக்கிறார்களல்லவா, சிறார்கள், அதுபோல எதேச்சாதிகாரம் கிழடு தட்டிய பருவத்திலே இவ்விதமான போக்குத்தான் கொள்ளும்.

நேரு பண்டிதர் இந்த வகையிலே, தம்பி, மிகத் திறமையாகப் பணியாற்றி வருகிறார்—என்றாலும் அவருக்கும், உள்ளூரத் தெரிகிறது, எத்தனை முறைகளைக் கையாண்டாலும், எவ்வளவு தந்திரமாக முறைகளைப் புகுத்தினாலும், தேசிய உணர்ச்சி அழிந்துபடாது என்ற உண்மை. மொழிவழி அரசு எனும் திட்டம், மெத்தச் சிரமப்பட்டுத் தாம் தயாரிக்கும் போலித் தேசியத்தை நாளாவட்டத்திலே நைந்துபோகச் செய்துவிடும் என்று அவருக்குப் புரிகிறது. எனவேதான் அவர், மொழி வெறி, மொழி அரசு என்ற பிற்போக்குத் திட்டம் கூடாது, ஆகாது என்று அடிக்கடி பேசுகிறார். இதோ, புதிய தமிழக அமைப்புக்கு, விழா நடத்தப்படுகிறதே, இதன் உட்பொருள் என்ன? கம்யூனிஸ்டுக்கு இந்த விழா மகிழ்ச்சி தருவானேன்? பொது உடைமை பூத்தாலன்றோ விழா, கம்யூனிஸ்டு சித்தாந்தப்படி! புதிய தமிழக அமைப்பினைத் திருநாள் ஆக்கி மகிழக் காரணம்? இதனை அறியாயோ, பேதாய்! பேதாய்! புதிய தமிழக அமைப்பு, பொது உடைமை அடைவதற்கான பாதையிலே ஓர் கட்டமாகும்! என்று கடிந்துரைப்பர் கம்யூனிஸ்டுகள்! தம்பி! அவர்கள் கோரும் கம்யூனிசம், பாரதம் முழுவதுக்கும்—அகில முழுவதற்கும்—எனவே, அதிலே, தமிழகம் என்று ஓர் எல்லை தேவை கூட இல்லை! எனினும் எல்லை கிடைத்து, புதிய தமிழகம் எனும் அமைப்பு ஏற்பட்டதும், அவர்கள், மகிழத்தான் செய்கிறார்கள் — மகிழ வாரீர் என்று மக்களையே கூட அழைக்கிறார்கள்! ஏன்? அவர்களையும் அறியாமல் அவர்களை ஆட்கொண்டிருக்கும், தேசிய இன உணர்ச்சி என்பதன்றி வேறென்ன! அவர்களிடம் கூறாதே, தம்பி, நாம் கூறுவதனாலேயே அவர்களுக்கு அது கசக்கும். அவர்கள் போலந்து, ஹங்கேரி, இப்படிப்பட்ட இடங்களிலே வெடித்து, சிதறி, இங்கு வந்து துண்டு துணுக்குகள் விழுந்த பிறகுதான், இவைகளை உண்மைகள் என்று மதிப்பளிக்க முன்வருவார்கள். நாம் சொல்லியா ஏற்றுக் கொள்வார்கள்!

புதிய தமிழக அமைப்பு, எல்லாக் கட்சியினருக்கும் மகிழ்ச்சி அளிக்கிறது.

ஆச்சாரியார் மட்டும் பாபம், துக்கமாக இருக்கிறார்!

ஐயோ! மெலிந்துவிட்டதே! சிறியதாகிவிட்டதே! சென்னை ராஜ்யம் என்றிருந்தபோது, எவ்வளவோ பெரிதாக இருந்தது—இப்போது ஆந்திரம், மலையாளம், இவை பிரிந்த நிலையில், தமிழ்நாடு என்பது சிறிய அளவாகிவிட்டது—என்று வருத்தப்படுகிறார்.

அவருக்கு இது விழாவாக இல்லை! விசாரப்படுகிறார்!

காரணம் காட்டாமலிருக்கிறாரா? அவராலா, முடியாது? காரணம் தருகிறார்!

பாரதத்தில், தமிழ்நாடு எனும் அமைப்பு, மிகச் சிறிய ராஜ்யம்—அதனால் அதற்குச் செல்வாக்கு, மத்திய சர்க்காரில் இருக்காது—பாரதத்தில் உள்ள மற்ற ராஜ்யங்கள் அளவில் பெரிது, அவைகளின் செல்வாக்கு மிகுதியாக இருக்கும் என்று ஆச்சாரியார் காரணம் காட்டுகிறார்.

ஆச்சாரியாரும் நமது கம்யூனிஸ்டு நண்பர்கள் போலவே, 'பாரதம்' எனும் திட்டத்தை ஏற்றுக்கொண்டுதான் பேசுகிறார்.

பாரதத்தில் ஓர் அங்கமாக, தமிழ்நாடு இருக்கிறது, இதன் பலனாக, எதிர்காலம் ஒளியுள்ளதாகும் என்பது கம்யூனிஸ்டுகளிப்புடன் காட்டும் வாதம்.

கவலையுடன் ஆச்சாரியார் கூறுவது, பாரதத்தில் ஓர் அங்கமாக அமையும் சென்னை ராஜ்யம், அளவில் மிகச் சிறியது, எனவே அதற்கு மத்திய சர்க்காரில் மதிப்பும் செல்வாக்கும் கிடைக்காது, என்பதாகும்.

சரி, அண்ணா! காமராஜர் என்ன கருதுகிறார் என்று என்னைக் கேட்டுவிடாதே தம்பி, நான் இப்போது, சிந்தித்துக் கருத்தளிக்கக் கூடியவர்களைப்பற்றிக் கூறுகிறேன், எஜமானர்களின் உத்தரவை நிறைவேற்றி வைக்கும் ஊழியம் செய்து வரும் சம்பளக்காரர்களைப்பற்றி அல்ல.

காமராஜரைத்தான் நாடு நன்றாக அறிந்து கொண்டு வருகிறதே! குளமாவது, மேடாவது! என்பவர் தானே, அவர்!!

ஏதோ, நேரு பெருமகனார் சம்மதமளித்ததால், குமரி கிடைத்தது! 'இல்லை' என்று டில்லி கூறிவிட்டிருந்தால் இவர் என்ன சீறிப் போரிட்டா பெற்றிருப்பார்! குமரியாவது கிழவியாவது, உள்ளது போதும், போ, போ! என்றல்லவா பேசுவார்! இனி சிந்தித்துக் கருத்தளித்திடுவோர் குறித்துக் கவனிப்போம் வா, தம்பி, நமக்கேன், நாடாள்வதால் நாலும் செய்யலாம் என்ற போக்குடன் உள்ளவர் பற்றிய கவலை.

பாரதம் என்ற பேரரசு இருக்கும்—புதிய தமிழகம் அதிலே ஓர் ராஜ்யம்—என்ற ஏற்பாடு, நிரந்தரமாக இருக்க வேண்டும் என்ற கருத்துடன்தான், கம்யூனிஸ்டும் ஆச்சாரியாரும் பேசுகின்றனர்.

தமிழ்நாடு தனி அரசு ஆக வேண்டும் என்று சொன்னாலே, அவர்களுக்குத் தலை சுற்றும்!!

ஆச்சாரியார், சென்னை ராஜ்யம் அளவில் சிறியதாகும் எனவே மத்திய சர்க்காரிலே செல்வாக்குக் கிடைக்காது என்று கூறுகிறார்—இதன் அடிப்படை உண்மை என்ன?

**மத்ய சர்க்கார் நீதியாக நடக்காது**

**மத்ய சர்க்கார் பெரிய ராஜ்யத்துக்குத்தான் ஆதரவு தரும்.**

என்ற கருத்து, வலுத்தவன் இளைத்தவனைக் கொடுமை செய்வான், பணக்காரன் ஏழையை அடிமை கொள்வான், என்பது போல இல்லையா! மத்ய சர்க்கார் என்ற அமைப்பிலே இருந்து கொண்டு நாம் செல்வாக்குப் பெற வேண்டுமானால், அதற்கு ஏற்ற கெம்பீரம் இருக்க வேண்டுமாம்!! இதிலிருந்தே தெரியவில்லையா, மத்திய சர்க்காருடைய போக்கின் இலட்சணம்!!

ஏதேதோ சொல்லவேண்டுமென்று எண்ணிக் கொண்டு எதைச் சொன்னால் தாட்சணியக் குறைவு ஏற்பட்டுவிடுமோ என்று பயந்து பயந்து ஆச்சாரியார் பேசுகிறார். மத்திய சர்க்கார் என்ற திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்போது, அதிலேசிறியராஜ்யமென்ன—பெரிய ராஜ்யமென்ன!! செல்வாக்கும் மதிப்பும்பெறவேண்டிய அவசியம் என்ன வந்தது. மத்திய சர்க்கார், நீதியாக, நேர்மையாக நடக்காது என்ற சந்தேகம் கொள்வானேன்! அந்தச் சந்தேகத்துக்கு இடமிருக்கிற போது மத்திய சர்க்கார் என்ற திட்டத்துக்கு ஒப்பம் அளிப்பானேன்! ஆச்சாரியார் இதற்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்—கிலியை அவரே கிளப்பி இருப்பதனால்.

கம்யூனிஸ்டுகளுக்கு இந்த அச்சம் இல்லை — அவர்கள் உத்தரப் பிரதேசத்தை விடச் சென்னைப் பிரதேசம் அளவில் சிறியதாயினும், அதன் காரணமாக, மத்திய சர்க்கார் பாரபட்சமாக நடந்துகொள்ளாது—என்று தைரியமளிக்கிறார்கள்.

தம்பி! நாமோ, இருவரும் அஞ்சிடும் திட்டம் கூறுகிறோம் — எதற்காக, மத்திய சர்க்காரின் ஆதிக்கத்தில், தமிழ் அரசை உட்படுத்துகிறீர்கள் — பிறகு, அங்கு நீதி கிடைக்குமா, கிடைக்காதா என்று விவாதம் நடத்திக்கொண்டு அல்லற்படுவானேன்—தனி அரசாக இருந்தால் என்ன? என்று கேட்கிறோம். உடனே, மாறுபாடான கருத்துகளை வினியோகித்துக் கொண்டிருக்கும் ஆச்சாரியாரும் கம்யூனிஸ்டும் கைகோர்த்துக் கொண்டு, நம் எதிரே வந்து நிற்கிறார்கள்—தனி நாடா!! ஆகாது! ஆகாது! கூடாது! கூடாது!! பாரத்மாதாகி ஜே!! என்று கோஷமிடுகிறார்கள்.

தமிழ்நாடு — அளவில் சிறியது என்று ஆச்சாரியார் கூறும்போது, கம்யூனிஸ்டுகள், அளவு பற்றி என்ன கவலை, அதற்காக அச்சம் கொள்வானேன் என்று பேசுகிறார்கள்!

தமிழ்நாடு கூட அல்ல, தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், கருநாடகம்—இந்த நான்கும் மொழி வழி அரசுகளாக இருக்கும் நிலையில், ஓர் கூட்டாட்சி அமைத்துக் கொண்டு, பாரத பிணைப்பை நீக்கிக்கொண்டால் என்னய்யா, என்று நாம் கேட்கும் போதோ, ஆச்சாரியாரும், அவரைநோக்கி அஞ்சாதீர் என்று கூறிய கம்யூனிஸ்டும் கூடிக்கொண்டுவந்து நம்மைக் குட்டியபடி ஏடா! மூடா! சிறு சிறு நாடுகளாகப் பிரித்தால் சீரழிவுதானே ஏற்படும், என்று குடைகிறார்கள்.

தம்பி! இவர்தம் போக்கை என்னென்பது!

ஆச்சாரியார் கொண்டுள்ள அச்சத்தைப் போக்கிக்கொள்ள அவர் காட்டும் பரிகாரம், தட்சிணப்பிரதேசம். அது, ஒரு கலவை! தமிழகம், ஆந்திரம், கேரளம், கருநாடகம் எனும் மொழி வழி அரசுகள் கூடாது, கிடையாது — இவையாவும் ஒரே கொப்பரையில் போட்டுக்கொதிக்க

வைத்துக் குழம்பாக்கி, ஒரு வார்ப்படமாக்கவேண்டுமாம்—தட்சிணப் பிரதேசமென்று — இதை வார்த்தெடுத்து டில்லியிடம் காட்டி 'முத்திரை' பொறித்துக்கொள்ள வேண்டுமாம்—இது ஆச்சாரியாரின் அவியல்!!

கம்யூனிஸ்டு திட்டம் மொழிவழி அரசு இருக்கும், ஆனால் அது டில்லி காட்டும் வழி நடக்கும் என்பதாகும்.

நாம் கூறுவது, மொழிவழி அரசு அமையட்டும், பிறகு, ஓர் திராவிடக் கூட்டாட்சி அமைத்துக்கொண்டு, டில்லியின்பிடியிலிருந்து விலகுவோம் என்பது!

கூட்டாட்சிக்கு 'திராவிட' என்ற அடைமொழி கொடுப்பதற்குக் காரணம், தமிழ், தெலுங்கு, மலையாளம், கருநாடகம் ஆகிய நான்கும் திராவிட மொழிகள் என்பதாலும் திராவிட இனத்தவர் இந்த நால்வர் என்பதாலும் ஆகும்,

தட்சிணப் பிரதேசம் என்ற நாமகரணத்தைக் காட்டிலும். திராவிட நாடு—திராவிடக்கூட்டாட்சி என்று பெயரிடுவது, வரலாறு, இலக்கியம். கல்வெட்டு, மொழிநூல் அறிவு எனும் பல்வேறு ஆதாரங்களைத் துணைகொண்டதாகும்.

ஆனால், அதனைக் கூறுகிற நாம், தம்பி, சாமான்யர்கள்! ஏழையின் பேச்சு அம்பலம் ஏறவில்லை!!

எனவே தம்பி, புதிய தமிழகம் அமைகிறது—அதிலே நமது நம்பிக்கையும் மலர்கிறது. மொழிவழி அரசு—திராவிடக் கூட்டாட்சிக்குத்தான் வழிகோலும் என்பது நமது திடமான நம்பிக்கை.

அந்த நம்பிக்கையுடனேயே நாம், புதிய தமிழக அமைப்பை, விழாவாகக் கொண்டாடுகிறோம்.

தீபாவளியுடன் அந்தத் திருநாள் இணைந்துவிட்டது—எனவே, திராவிட முன்னேற்றக் கழகம்; இந்த விழாக் கொண்டாடி இதிலிருந்து பெறக்கிடைக்கும்கருத்துகளை நாட்டு மக்களுக்கு எடுத்துக்கூற, வேறோர் நாளைக் குறித்திட வேண்டும் என்று உன் சார்பிலும் என் சார்பிலும், நமது பொதுச் செயலாளரை நான் கேட்டுக்கொள்கிறேன். வாழ்க தமிழகம்! வருக திராவிடம்!! அன்பன்,

அண்ணாதுரை

# HOME LAND

இருட்டடிப்புக்கு ஆளாகி இருந்த திராவிட இயக்கம் இன்று ஓரளவுக்கு, பொதுமக்களின் செல்வாக்குப் பெற்றிருப்பதற்குக் காரணம், மற்ற இதழ்களின் துணையைப் பெறாத நிலையை அறிந்து, நாமே இயக்க ஏடுகள் சிலவற்றையேனும், நடத்திவருவதுதான்.

தமிழர், தமிழ் ஏடுகள் மூலம் விளக்கம் பெற்றனர்.

இனி, ஆந்திரரும், கேரளத்தாரும், கருநாடகத்தாரும், திராவிடக் கூட்டாட்சியின் காரணங்களை அறிந்து ஆதரவு அளிக்க வேண்டாமா?

'திராவிடநாடு' கேட்கும் நமது இயக்கம் பொதுமக்களிடம் கொண்டுள்ள தொடர்பு, நடாத்தும் கிளர்ச்சிகள், பெற்றுள்ள செல்வாக்கு ஆகியவற்றினை, வடவர் அறிந்துகொள்ளவேண்டாமா?

உலகெங்கணும் சென்று, உரிமை முழக்கமிட்டு வருபவரும், சீலம் போதிப்பவருமான நேரு பண்டிதர், திராவிடத் திருநாட்டை போலி தேசியத்தின் பெயர் கூறி அடிமைக்காடு ஆக்கிவைத்திருப்பது, உலக நாடுகள் பலவற்றினுக்கும், மாமன்றங்கட்கும் தெரிந்திட வேண்டாமா?

இந்துவும் மெயிலும், டைம்சும் பிறவுமா இந்தச் 'சேதி'களை உலகுக்குத் தரும்!

அவை இருட்டடிப்பு நடத்தி வருகின்றன என்பதுமட்டுமல்ல, இல்லாததும் பொல்லாததுமான செய்திகளை, நமதுகழகத்தை இழித்தும் பழித்தும் பேசப்படும் புரட்டுரைகளையே பெரிதும், மற்றஇதழ்கள் படைக்கின்றன.

பிற நாடுகள்—பிற அரசுகள்—நமது உரிமைக் கிளர்ச்சியை அறிந்திட நாம்தான் வழி கண்டாகவேண்டும்.

இதற்கு, கொள்கை விளக்கம் தரும் ஓர் ஆங்கிலக் கிழமை இதழ் மிக மிக அவசரமாகத் தேவை என்பதை உணர்ந்த நண்பர்கள் பலர், பல நாட்களாக—ஆண்டுகளாக — என்னைத் தூண்டியபடி இருந்தனர்.

எனக்கு, நிலைமை தெரிகிறது. ஆங்கிலக் கிழமை இதழின் அவசியம் புரிகிறது, என்றாலும், அச்சம் தாக்கும் நிலைமைதான்.

ஆங்கிலக் கிழமை இதழ், நல்ல ஆதரவு பெற்று தழைத்திட, நீண்ட காலம், பலன் கருதாமல் உரமிட்டாகவேண்டும்!

செலவும் சிரமமும் அதிகமாக இருக்கும் — சஞ்சலமும் சலிப்பும் தாக்குமோ என்றுகூட எனக்கு அச்சம்.

ஆங்கிலக் கிழமை இதழுக்கு தேவையான செலவினம் அதிகம் —எல்லா வகையிலும். இதனை ஈடு செய்வதற்கான விதத்தில் ஆதரவாளர் கிடைப்பார்களா என்பதை எண்ணும்போது, எனக்கு நடுக்கம்—உண்மையிலேயே!

கல்லூரியில் பயிலும் தோழர்களும். உயர்நிலைப்பள்ளியில் உள்ள மாணவ நண்பர்களும், பல்வேறு அலுவலகங்களில் பணியாற்று

வோரும், ஆர்வம் காட்டி, ஆதரவு திரட்டித்தந்தாலொழிய, ஒரு ஆங்கிலக் கிழமை இதழ்—நாள் இதழ் அல்ல! எழிலுருவம் பெறுவது கடினமான காரியம்.

அச்சுக் கோர்ப்பதற்காகும் செலவினத்திலிருந்து வண்ணம் தரும் காரியம் வரையில், ஆங்கில ஏடு, அதிகப் பொருட் செலவை ஏற்றாக வேண்டும்.

இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள பலமொழி இதழ்கள் வெளியாகும் இல்லங்களிலெல்லாம், இந்த ஆங்கிலக் கிழமை ஏடு, சென்று உறவாட வேண்டும்.

ஓராண்டுவரையிலாவது இதனை வீண் செலவு என்று கருதாமல் மேற்கொண்டாக வேண்டும்.

வெளி நாடுகளில் உள்ள இதழாசிரியர்கள், அரசியல் தலைவர்கள், வரலாற்றுப் பேராசிரியர்கள் ஆகியோரின் பார்வைக்கு இதழ் கொண்டுவரப்படுவதன் மூலம், திராவிடநாடு பற்றிய கொள்கை விளக்கம் அங்கெல்லாம் பரவிட வேண்டும்.

புகழொளி கண்டு, உண்மை நிலைமையை அறிய முடியாதிருக்கும் இடங்கட்கெல்லாம், விளக்கமளிக்க வேண்டும்.

இந்தவகையில், வருவாய் கருதாமல் குறைந்தது ஆயிரம் பிரதிகள், பரப்பவேண்டிய நிலை இருக்கிறது.

ஆங்கில கிழமை இதழ், இது போன்ற சங்கடம் பலவற்றினைச் சுமந்து தீரவேண்டும்—அதுவும் துவக்க நாட்களிலேயே.

இதற்கு மட்டும், நண்பர்கள், ஆர்வம் குன்றாமல், ஆதரவு அளிப்பார்களானால், நாம் எதிர்பார்ப்பதைவிட வேகமும் விறுவிறுப்பும் கொண்ட விதத்தில் அறிவொளி பரப்ப முடியும்!

இன்பத் திராவிடத்தின் இணையில்லா வரலாறு மறைக்கப்பட்டிருக்கிறது!

பேதமற்ற சமுதாயம், சாக்கடை ஆக்கப்பட்ட சூழ்ச்சி, உலகுக்கு விளக்கப்படவில்லை.

இந்தியப் பேரரசு, தென்னகத்துக்கு இழைத்த கேடுகள் குறித்த மனக்குமுறல், மூடி மறைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலைமையை மாற்றி அமைக்க நிச்சயமாக ஆங்கிலக் கிழமை இதழ் தேவை.

நண்பர்கள் நிச்சயமாக ஆதரவு திரட்டித் தருவர் என்ற நம்பிக்கையுடன், பல காலமாக இருந்து வந்த அச்சத்தை, ஐயப்பாடுகளை நீக்கிக் கொண்டு, ஆங்கிலக் கிழமை இதழை வெளியிடுவது என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன்.

இதற்கு முன்பு இரண்டோர் முறை முயற்சிகள் எடுத்ததுண்டு—பயம் காரணமாகவும், புதிய பாரம் என்ற எண்ணத்தாலும், கருவில் உருவாக விடவில்லை.

இம்முறையும், முயற்சியை முறித்துக்கொள்ள விரும்பவில்லை.

ஆங்கிலக் கிழமை இதழ், ஜனவரித் திங்கள் வெளியிடுவது என்று துணிந்து வேலையில் ஈடுபட்டு விட்டேன்.

காஞ்சீபுரத்தில், திராவிட நாடு அச்சகத்திலிருந்தே இந்த ஆங்கில இதழ் வெளியிட ஏற்பாடாகி இருக்கிறது

கிட்டத்தட்ட ஆறு திங்களுக்கு முன்பு, துரைத்தனத்துக்குத் தெரிவித்துக் கொண்டேன்.

துருவித் துருவி ஆராய இத்தனை திங்கள் பிடித்ததுபோலும். 3—11—56 அன்று, ஆங்கில கிழமை இதழ் வெளியிடுவதற்கான அனுமதி அளிக்கப்படும் என்று அறிவிப்பு பெற்றிருக்கிறேன்,

டிம்மி, 8 பக்கம் அளவில், இதழ் வெளிவரும்—விலை இரண்டணா.

நமது இயக்க சம்பந்தமாக விளக்கக் கட்டுரை அளித்திட நிரம்ப நண்பர்கள், தமிழகத்தில் இங்கும் அங்குமாக உள்ளனர்—அவர்களுடைய அறிவாற்றலைச் சுவைத்திடலாம்.

வெளிநாடுகளிலே மலர்ந்துள்ள விடுதலை இயக்கங்கள், அறிவியக்கங்கள் குறித்தும், அறிந்திட வாய்ப்பாக இதழ் அமையும்.

இணைப்பாகவும், தோழமை வளர்ப்பதாகவும், ஆங்கில இதழ் பணியாற்றும்.

ஜனவரி திங்களில், வெளியிட நான் தயாராக இருக்கிறேன்—ஆனால் ஒரு நிபந்தனை—ஆமாம்—என் ஊக்கம் குன்றாமலும், உற்சாகம் குறையாமலும், ஆர்வம் குலையாமலும் இருக்கவேண்டுமானால், நண்பர்களே! நீவிர் ஒவ்வொருவரும், உடனே, இந்தக் கிழமை இதழுக்குச் 'சந்தாதாரராகச் சேர்ந்திடவேண்டுகிறேன்.

முதல் இதழ் வெளியிடும்போது குறைந்தது, ஆயிரம் சந்தாதாரர்களாவது, இருந்து இருக்க வேண்டும்.

இந்த அளவு ஆதரவும் அடிப்படையும் கூட அமைத்துக்கொள்ளாமல், இதழ் நடத்த முற்படுவது, சில நாள் கூத்தாகி, மனம் உடையும் காரியமாகிவிடும் என்று அஞ்சுகிறேன்.

என்னை, நண்பர்களே! நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

எனக்கு, உங்களிடம் முழு நம்பிக்கை இருக்கிறது.

எனவேதான், சிறிதளவு கூச்சமற்றுக் கூட உங்களிடம் பேசுகிறேன்.

ஜனவரித் திங்களில் ஆங்கிலக் கிழமை இதழ் வெளியிடுவதற்கான வலிவினை அருள் கூர்ந்து எனக்கு அளித்திட முன்வரவேண்டுகிறேன்.

ஆயிரம் சந்தாதாரர் வேண்டும்—ஆண்டுச் சந்தா ஏழு ரூபாய்.

ஆங்கில ஏடு, அகிலத்துடன் திராவிட இயக்கத்தைத் தொடர்பு கொள்ளச்செய்யும்.

நோக்கத்தின் நேர்த்தியை அறிந்த நண்பர்களே! இன்றே இதற்கு ஆவனசெய்வீர் என்று பெரிதும் நம்புகிறேன்.

ஜனவரி திங்களில் உங்கள் கருத்துக்கு விருந்தாக,

# Home-Land

வெளிவர இருக்கிறது!

உமது ஆதரவுதான், சுகப்பிரசவத்துக்கான ஒரே மார்க்கம்.

அன்பன்

**அண்ணாதுரை.**

# “விங்கல்ரைட்”

சுவிட்சர்லாந்து நாட்டில் ஒரு காலத்தில் போரும் பூசலும் நிறைந்து, எக்கணமும் பகைவர் வருவர் என்ற அச்சமிருந்து நாடு அமைதி இழந்து கிடந்தது.

ஹாப்ஸ்பர்க்குடும்பத்தினர் சுவிட்சர்லாந்து குடி மக்களாக இருந்தவர்கள் என்றாலும், செர்மன் நாட்டுப் பட்டம் கிடைத்ததும் சுவிட்சர்லாந்தைச் செர்மனியின் ஆளுகைக்கு உட்படுத்த எண்ணினர். படை திரட்டினர்; பட்டாளம் ஏற்படுத்தினர். களம் காண வாரீர் எனச் சுவிட்சர்லாந்துக்கு அழைப்பு அனுப்பினர்.

உரிமை வாழ்க்கையை உயிர் இயல்பாகக் கொண்டிருந்த சுவிட்சர்லாந்து மக்கள் இதைக் கண்டு மனம் புழுங்கினர். மானம் பறிக்கப்படுகின்றதே என்று திண்டாடினர், அடிமை ஆகோம், ஆளாகி அந்நியர் தாள்பற்றிப் பணியோம்உறுதிகொண்டனர். கொடுமனக்காரர்களை போர்க்களத்தில் காண ஒப்பினர். முறையான பயிற்சியோ, வகையான படையோ, நெறியான அமைப்போ இல்லாது போயினும் ‘தம் நாட்டைக் காக்க வேண்டும்’ என்ற தளராத எண்ணத்தினால் ஆற்றலெல்லாம் காட்டி ஆணவக்காரர்களை எதிர்த்துப் போரிட்டனர். எதிரிகளை விரட்டியடித்தனர்.

இதுபோல் பல முறை பல இடங்களில் நடைபெற்றது. விடுதலை வேட்கையினர் வெற்றியைத் தழுவினர் என்றாலும், செர்மன் நாட்டவர் ஒவ்வொரு முறையும் பெரும்படையினராக வந்து கொண்டிருந்தனர். ஆட்கள் தொகை அதிகமாக ஆக அவர்கள் கை ஓங்கிவிடுமோ என்று அஞ்சத்தக்க நிலை வாய்த்தது.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் 1385-ஆம் ஆண்டில் மிகமிக நெருக்கடியான நிலைமை வளர்ந்துவிட்டது. போர் வெறிகொண்ட செர்மானியர் பெரும் படையைத் திரட்டிக்கொண்டு பாய்ந்து வந்தனர். ஐரோப்பா எங்கணும் தன் வீரத்தாலும் வல்லமையாலும் புகழ்பரப்பி இருந்த தளபதி ஒருவன் படைக்குத் தலைமை ஏற்றிருந்தான்.

சுவிஸ் வீரர்கள் ஊர் ஊராக அலைந்து திரிந்தனர். வாரீர் வாரீர் என்று படை திரட்டினர். மக்கள் தங்கள் உயிரையும் தரத் தயாராகத் தான் இருந்தனர். ஆனால், அதனால் பலன் இன்றிப் போய்விட்டால்...என்ன செய்வது என்று தடுமாறினர்.

செம்பாக் என்னுமிடத்தில் இருதரப்புப் படைகளும் சந்தித்தன. அணிவகுப்பு முடிந்து அமர் தொடங்கவேண்டியதுதான். செர்மானியர் வரிசைவரிசையாக நின்று நீண்ட வேல்களை எதிரிகளை நோக்கி உறுதியாகத் தடுத்துக் கொண்டு நின்றனர். ஒரு அங்குலம் கூட முன்னேறவில்லை. வேகமாக வரும் வீரன் அந்த வேலில் குத்துண்டு மாளட்டும் எனக் காத்திருந்தனர் அவர்கள்.

ஆர்த்தெழுந்து வந்த சுவிஸ் வீரர்கள் இதைக்கண்டு ஏதும் செய்ய இயலாது மருண்டனர். ஒரு வீரன்—ஒரே ஒரு வீரன் மட்டும் தன்னைக்கூட அல்ல—தன் வாளை மட்டுமாவது செர்மானியர் படையுள் நுழைத்துவிட்டால் நிச்சயம் நம் படை உள்ளே சென்றுவிடும் வெற்றியும் பெற்றுவிடுவோம் என்று எண்ணினர் சுவிஸ் வீரர்கள்.

எப்படிப் போவது? யார் போவது? வழி எது? என்று எல்லோரும் எண்ணிக் கிடந்தனர்.

அந்த ஒரு வீரன் செய்யும் துணிவான செயலில்தான் சுவிஸ் நாட்டின் எதிர்காலமே அடங்கிக் கிடந்தது.

விரைந்து ஓடிச் சென்று இருகைகளில் எவ்வளவு வேல்களை பிடிக்க முடிந்ததோ அவ்வளவையும் பிடித்துத் தன் வயிற்றில் பாய்ச்சிக் கொண்டான். ஆபத்தான அந்த தியாகத்தைக் கண்டு செர்மானியர் மயங்கிக்கிடந்தனர். தங்கள் வேல்களை உருவிக்கொள்வதற்குள் குபுகுபுவென சுவிஸ் வீரர்கள் செர்மன் அணிவகுப்பில் நுழைந்தனர். வெற்றி அவர்கள் அடிபணிந்தது.

தன் வாழ்வு, குடும்பம், சுற்றம் என்று எண்ணிடாமல் தன் நாடு என்ற எண்ணத்தினை பெருமையாகக்கொண்ட அந்த மாவீரன் ‘விங்கல்ரைட்’ பெயர் வரலாற்றில் அழியாத ஓவியமாயிற்று!

★

# நவம்பர் 1 முதல்



அறிஞர் அண்ணாவின்

# ரங்கோன் ராதா

சென்னை:

**பிரபாத் • பாரகன் • சரஸ்வதி**

மற்றும் தென்னாடெங்கும்

வசனம்: மு.கருணாநிதி • தயாரிப்பு: மேகலா பிக்சர்ஸ் • டைரக்ஷன்: A.காசிலிங்கம்

**நேஷனல் பிக்சர்ஸ்**

G.H.RAO

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடப்படுகிறது.